JL
ஐ211,N27SM
N34.7.9
186938

476

No. M. 2302.


476

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF ... 25 APR 1934 MADRAS

# சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு எ. § பவ—சித்திரை: 1934—ஏப்ரல் § திங்கள் கூ.

எண் 7 உள்ளுறை. 9 பக்கம்.


| | | |
|---|---|---|
| க. | இறைவனருளிய இருபெரு நூல்கள். ... | 189 |
| உ. | உலகிற் சிறந்தது எது? ... | 193 |
| ௩. | மங்கையர்க்கரசியார் அன்பின் மாண்பு. ... | 197 |
| ௪. | சைவத்திருமுறையும் அதனை ஓதுந்தன்மையும். ... | 199 |
| ௫. | முக்கிய வினா. ... | 202 |
| ௬. | ஏகாதசிவிரதம் சைவர்களுக்கும் உரியதே. ... | 203 |
| எ. | சிவஸ்ரீ சாம்பமூர்த்திசிவாச்சாரியார் வினாவுக்கு விடை... | 206 |
| அ. | முதற்கடவுள் முக்கண்ணனே. ... | 207 |
| கூ. | சிவநேசனுக்கு மூலதனம் உதவிய திருவாளர்கள். ... | 211 |
| ௰. | சிவநேசனுக்கு வாழ்த்து. ... | ,, |
| ௰க. | பழமலைக்கோவை. | (41—48) |


---

ஆசிரியர் ராம. சு. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

**உள்ளூர்:**—சிவாலயத்தில் வருடப்பிறப்பன்று இராத்திரி சுவாமி யெழுந்தருளினர். குமாரவிநாயகர் திருக்கோயிலில் இம்மதி உசவ திருவோணநாளில் நடராஜாபிடேகம் நடைபெறும்.

**குன்றக்குடி:**—பங்குனி அஉ ஸ்ரீவல்லி தேவ சேனாசமேத வடிவேற் கரத்தருக்குக் காப்புக்கட்டி, கசுஉ தேர்த்திருவிழாவும், கஎஉ உத்தரத் திருநாளன்று தீர்த்தவாரி, மயிலாடுபாறை மண்டபப்படியும் சிறப்பாக நடைபெற்றன. சர்க்கரைக் காவடி, பாற்காவடி, சோதனைக் காவடி, இளநீர்க் காவடிகள், பால், பனிநீர், சந்தனம், விபூதிஆதிய அபிடேகதிரவியக் குடங்களும் நிரைநிரையாக அரகர முழக்கத்துடன் யாவரும் பரவசமுறும் வண்ணம் அன்பர்கள் கொண்டுவந்து சேர்த்து சேவித்த காட்சியும், முடிப் பிரார்த்தனை செலுத்தி கரும்புத் தொட்டில்கள் கட்டியும், கும்பிடுதண்டம் போட்டும், அங்கப் பிரதட்சிணங்கள் செய்தும் சேவித்தோர்களின் காட்சியும், தழலிற் குளித்தெழுந்த பக்தர்களின் மனோநிலையும், தழல்வெப்பந் தாக்காது தண்ணளி புரிந்த அண்ணலாரின் பிரபாவமும், ஒவ்வொரு நாளும் சர்வாலங்கிருத பூஷிதராய் மேளதாள விருதுகளுடன் ஆண்டவன் எழுந்தருளிய காட்சியும், ஆரிய தமிழ்வேத பாராயணங்களும், சங்கீதக் கச்சேரிகளும், ஒன்றிய மனத்துடன் இலட்சக் கணக்காக வந்து சேவித்த அன்பர்களுக்குஅற்புதக்காட்சிகளாக மனவெழுச்சியைத்தந்துஇன்பூட்டின.

ரிஸீவர் நியமனத்திலிருந்த விசாரணையை, சென்னை உயர்தர நீதிமன்றத்தாரின் தீர்மானப்படி உயர்திரு பண்டார சன்னிதி அவர்கள் ஒப்புக்கொண்டு நடத்திவருகிறார்கள்.

**பாதரக்குடி:**—கனகபுரம் என்னும் இப்பதியில் தனவணிக நகரத்தார்களின் குலகுருவாக எழுந்தருளி யிருக்கும் திருப்புனவாசல் முதன்மையார் பிரமஸ்ரீ வேங்கடாசலபதி குருமூர்த்திகளுக்கு, ஷைமடத்துவாசல் நகரத்தார்களால், விரோதிகிரு—மார்கழி—உசுஉ சஷ்டியப்தபூர்த்தி மகோற்சவமும், பிரபவ—சித்திரை—உகஉ குருஸ்தானத்துக்கு எழுந்தருளிய அறுபதாம் வருடப்பூர்த்தி மகோற்சவமும், ஸ்ரீமுக—பங்குனி—ஙஎஉ உத்திர நாளில் சகஸ்ர சந்திர தெரிசனம் என்னும் சதாபிஷேக மகோற்சவமும் சிறப்பாகச் செய்யப்பெற்றன.

**ஆவினிப்பட்டி:**—விவேகாநந்தர் கல்விக்கழகத்தின் ஏழாம் ஆண்டு பத்தாம் மாசக்கூட்டம், 26—3—34 காலை போஸ்டுமாஸ்டர் திரு. வி. இராமையரவர்கள் தலைமையில் செவ்விதின் நடைபெற்றது. மாணவர் கடவுள் வணக்கஞ் செய்து, 'ஹிந்துமதக் கொள்கை' 'மனோபாவம்' 'தாய்மொழி' 'பெரியோர்கள்நிலை' 'தலைக்கொடை' 'உழவின் உயர்வு' 'திருவள்ளுவர்' 'உறக்கத்தின் உயர்வு' 'உதாரகுணம்' 'யானைக்குக் குறும்புசெய்தவன் பட்டபாடு' 'இராணிமங்கம்மாள்' என்பவைகளை இனிமையாகச் சொற்பொழிவுசெய்தனர். அருணகிரியார் வரலாற்றைத் திரு. கயி. வினைதீர்த்தாளுசாரி விளக்கினார். பண்டித வ. மு. இத்திநேசவரையரால், தமிழ்ப்பெருமை திருப்புகழ்மகிமை சண்முகநாதன் அருட்பெருக்கு என்னும் குறிப்புரைகள் கூறப்பெற்றன.

**வைத்தீசுவரன் கோயில்:**—பங்குனி உத்திரத்திருநாள், தேர்த்திருவிழா இடபவாகனக் காட்சி யாதியவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 APR 1935
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

| ஆண்டு எ | பலவான்குடி—பவ—சித்திரை | திங்கள் க. |
|---|---|---|

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

# இறைவனருளிய இருபெரு நூல்கள்.

எல்லா அறிவும் இயல்பாகவே உடைய இறைவன், சிற்றறிவுடைய சீவர்கள் விதிவிலக்கு அறிந்தொழுகி மெய்யுணர்வு வாயிலாக வீடுபேறு அடையும் பொருட்டுப் பெருங்கருணையினாலே அருளிச் செய்த பெருநூல்கள் வேதம் ஆகமம் என்னும் இரண்டுமாம். இவை பல்லாயிரங் கோடி சாகைகளாகவும் கிரந்தங்களாகவும் விரிந்துவிளங்கிக்கொண் டிருத்தலின் பெருநூல்கள் எனவும், மற்றைய ஸ்மிருதி புராணம் இதிகாசமாதிய சகல கலைகளும் தோன்றற்குக் காரணமா யிருத்தலின் முதனூல்கள் எனவும் வழங்கப்பெறும். இவற்றுள், பலதிறப்பட்ட பக்குவமுடைய ஆன்மாக்களுக்கு அவரவர் பக்குவத்திற் கியையப் பன்னெறிகளும் பகர்வதானும், பல தேவர்கட்கும் பரத்துவங் கூறுதலானும் வேதம் பொதுநூல் எனவும், சத்திநிபாதத்து உத்தம ஆன்மாக்களுக்குச் சரியை கிரியை யோகம் ஞானம் ஆகிய நாற்பாதங்களை நவில்வதானும், சிவபெருமான் ஒருவருக்கே பரத்துவஞ் செப்புதலானும் ஆகமம் சிறப்புநூல் எனவுங் கூறுவர். இவ்வுண்மை,

> "வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்
> ஓதும் பொதுவும் சிறப்புமென் றுன்னுக"

என்னும் திருமந்திரத்தானும்,

> "வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
> வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்

ஆதிநூ லநாதியம லன்றருநூ லிரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினு லுலகர்க்கும் சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையி னெழிபொருள்வே தாந்த,
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வம் சிவாகமங்கள் சித்தாந்த மாகும்."

என்னும் சிவஞான சித்தியாரானும் செவ்விதிற் றுணியப்படும்.

"திகழ்கின்ற சமயமும் அனந்தம்" என்றபடி உலகத்தில் வழங்கும் சமயங்கள் எண்ணிறந்தன. அவ்வச் சமயங்களுக்குரிய வேதாகமங்களும் பலவாம். ஆனால், அவைகளைவிட நமது சைவ சமய வேதாகமங்கள் மேம்பட்டவை யென்பதற்குக் காரணம் என் னையோ வெனின்,— அவைகளெல்லாம் உலகு உயிர் கடவுள் ஆகிய முப்பொருள்களின் இயல்புகளைத் தருக்கமுறை பிறழாது முற்றக் கூறுமையாலும், அவற்றின் கோட்பாடுகளெல்லாம் நமது வேதாக மங்களில் அடங்கவும், நமது சமயக்கொள்கைகள் அவற்றிலடங்கா மலும், அச்சமயங்களை யெல்லாம் படிமுறை யாக்கித் தான் அவற் றின்மேல் அரசென அமரும் மாண்புடைமையாலுமாம்.

"வேதத்தைத் விட்ட அறமில்லை வேதத்தின்
ஓதத் தகுமற மெல்லா முளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே."

"அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தான்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தி லரும்பொருள் கேட்டதே."

என்னும் திருமந்திரம் இதற்குச் சிறந்த சான்றாகும்.

எழுவகைப் பிறவிகளுள்ளும் மானுடப்பிறவி யெய்தல் மிகவும் அருமை யெனவும், அவ்வரிய பிறவியை அடைந்தாலும் வேதாக மம் வழங்காத நாட்டிலே பிறவாது, அவை வழங்கும் புண்ணிய மிகுந்த இப் பாரதநாட்டிலே பிறத்தல் அதனினும் அருமை யென வும், அவ்வாறு இந் நாட்டிலே தோன்றினும் தவத்துறை யொழு காக் கீழ்ச்சாதியிற் பிறவாது தவஞ்செயும் உயர் சாதியிலும், அதி லும் புறச்சமயங்களிற் புகாது பிறப்பிறப்பொழித்துப் பேரின்ப முத்திபயக்கும் சைவசமயத்திலும் சார்தல் ஆகிய புண்ணியம் அரி தினும் அரிதாம் எனவும்,

"நரர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றல் மிக்கபுண் ணியத்தா ஞதும்
[illegible]யினிற் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
[illegible]யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணெ ஞரே."

186938



என்னும் அருணந்தி சிவாச்சாரியாரின் அமுதவாக்கால் அறியக் கிடக்கின்றன. இதனாலும் நமது வேதாகமங்களின் மேம்பாடுவிளங் குகின்றதன்றோ?

இம்முறையில் இவ்விருபெரு நூல்களும், நம் சைவசமயத்துக் குப் பரமப் பிரமாண நூல்களாகவும், சைவசமயிகட்கு இருகண்க ளாகவும் இலங்கிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், இவையெல்லாம் வடமொழியி லல்லவோ வகுக்கப்பட் டுள்ளன. தமிழ் மக்களாகிய எம்மனோர்க்கு இவற்றால் என்ன பயன் என்று இயம்பலாமோ? இயம்பலாகாது. என்னெனில்: 'தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ் விரண்டும், உணர்த்தி' யருளிய உம்பர் நாயகனாகிய எம்பிரான், தமிழ்மக்கள் கடைத்தேறும் வண் ணம் கருணை செய்யாதொழிவனோ? அவ் வேதாகமப் பொருள்க ளையெல்லாம், சீவத்துவமொழிந்து சிவத்துவமுற்ற தவத்தினையுடை ய திருஞான சம்பந்தராதிய சைவசமயாசாரியர்கள் நால்வர், திரு மூலர், சேக்கிழார், திருவள்ளுவர் முதலான அநேக அருட்டிருவா ளர்களை அதிட்டித்து நின்று தேவாரம் திருவாசகம் திருமந்திரம் திருத்தொண்டர் புராணம் திருக்குறளாதிய பெருநூல்களாகச் செந் தமிழில் விரித்துரைத்து வைத்துள்ளானன்றே?

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."

என்னும் ஔவைப்பிராட்டியார் அருள்வாக்கால், மேற்காட்டிய திருக்குறளாதிய நூல்களும் திருநான் மறைகளின் முடிபுகளும் ஒருநிகரான் தன்மையுடையன என்று பெறப்படுகின்றதன்றோ? பே யினாற் பீடிக்கப்பட்டான் வாய்ச்சொற்களெல்லாம் பேயின் சொற்க ளே யன்றி அவன்சொற்க ளாகாவாறுபோல, சிவத்தினால் விழுங் கப்பட்ட சிவஞானிகளின் வாய்ச்சொற்க ளெல்லாம் அச் சிவவாக் கே அன்றி வேறாகா எனத் துணிக. இக்காரணங் கொண்டே தே வாராதி திருமுறைகளும் திருக்குறளும் தொன்றுதொட்டுத் தமிழ் வேதங்கள் என வழங்கிவருகின்றன.

"செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே"

"ஆரியம், வேத முடைத்துத் தமிழ்த்திரு வள்ளுவனார்
ஓதுங் குறட்பா வுடைத்து."

என்பனவாதிய அளவிறந்த ஆசிரியவசனங்கள் இதனைவலியுறுத்தும்.

அன்றியும், காமுகன் ஒருவனுக்குத் தன்வாய்ச் சொல்லினும் தன்னால் விரும்பப்பட்ட காமக்கிழத்தியர் வாய்ச்சொல்லில் மிகுந்த

விருப்பம் உண்டாமாறுபோல, இறைவனுக்கும் தன்வாய்ச் சொல்லாகிய வடமொழி வேதாகமங்களினும், தன்னால் அதிட்டிக்கப்பட்ட சிவஞானிகளாகிய சமயாசாரியராதியோர் அருளிச்செய்த தேவாராதி தமிழ்வேதங்களில் மிகுந்த விருப்புண்டாமாதலின், தமிழ்வேதங்கள் மிகவும் சிறப்புடையன வாகும்.

"ஓதுமூ துணர்வோர்முற், பழிச்சு பாடலை அரற்கவை விடர்க்
கிளம் பாவையர் உரைபோலும்...'

என்னும் வைராக்கிய சதகம் ஈண்டு ஒப்பிட்டு உணரத்தக்கதாம்.

அன்றியும், ஆரியவேதம் கருமம் பத்தி ஞானம் ஆகிய மூன்றினையும், ஆகமம் சரியையாதிய நான்கினையும் விரித்துவிளக்குமாறே, திருக்குறள் கருமத்தையும், தேவாராதி திருமுறைகள் பத்திஞானத்தையும், சிவஞானபோதமாதிய பன்னான்கு சித்தாந்த சாஸ்திரங்கள் ஆகமசாரமாய்ச் சரியையாதிய நாற்பாதங்களையும் தொகைவகைவிரியெனும் யாப்புற விளக்குவனவாம். இவ்வாறு ஆரியந்தமிழ் எனும் இருபெரு வேதாகமங்களும் ஒற்றுமையாயும், ஒன்றற்கொன்று காரண காரியமாயும் விளங்குதலை,

"வேதம் பசுவதன்பால் மெய்யா கமநால்வர்
ஓதுந் தமிழதனி னுள்ளுறுநெய்—போதமிகும்
நெய்யி னுறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் றிறம்."

என்ற தனிச்செய்யுள் உருவகமுகமாக நன்கு உணர்த்துகின்றது.

ஒரு சக்கரவர்த்தி தன் வாய்மொழியிற் சட்டதிட்டங்களை வகுத்து, அவற்றைத் தன் குடிமக்கள் பேசும் பன்மொழிகளினும் மொழிபெயர்த்து வழங்கினும், மொழி வேற்றுமை கருதாது அவைகூறும் விதிவிலக்கு அயராது அக்குடிகள் அடங்கி நடத்தலே போல, இறைவன்றன் வாய்மொழியாகிய ஆரிய வேதாகமங்களையும், அவன் றிருவடியில் அத்துவிதக் கலப்புற்றுள்ள அருளாசிரியர்களருளிய தமிழ் வேதாகமங்களையும் மொழி வேற்றுமை கருதாது அவைகட் கடங்கி நடத்தலே நன்மக்கட் கடனாகும். அரசனாணையைக் கடப்போர் இம்மைக்கண் அவனால் தண்டிக்கப் படுதலே போல், இறைவனருளிய வேதாகம விதிநெறி கடந்தொழுகுவோர் மறுமைக்கண் இயமதூதர்களால் ஒறுக்கப்பட்டு எரிவாய் நரகுங் கிரையாவார்கள் என்ப. அரசனைக் காணாவிடத்தும் அவன் கட்டளையாகிய சட்டதிட்டங்கட்கு அடங்கி நடத்தலே போல, நாம் இறைவனைக் காணாவிடத்தும் அவன் அருளிய இருபெரு நூல்களாகிய வேதாகமங்கள் விதித்தன செய்து விலக்கியன வொழிந்து இம்மை மறுமை வீடு என்னும் மும்மைப் பயனையும் அடைதற்குரிய செந்நெறி படர முன்னுவோமாக!

———

௨

# உலகிற் சிறந்தது எது?

திருவையாறு, தமிழாசிரியர் திரு. இ. கோவிந்தசாமிபிள்ளை அவர்கள், தமிழ்ப்பொழிலில் எழுதியது.

"திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை."

உலகிற் சிறந்தது எது? என்னு மும்மொழித் தொடருக்குப் பொருளியாதென வாராய்வுழி, உலகினுள் சிறந்ததாகிய வுலகம் யாது? என்றும், உலகின்கண் சிறந்ததாகிய பொருள்யாது? என்றும் பொருள் புலப்படக்கிடக்கும். நம்மவருட் சிலர் வேறு சிலரை நோக்கி, இவர் உலகம் தெரியாதவர் என பொருள் ஆராய்ச்சி கூறிவரலை நாம் பன்முறை கேட்டிருக்கின்றோம். அவர் கூறு முலகம் எது? தெரியாதது எது? தெரிந்ததுளது? எனக்கூறுவர்தாமும் அறிவரோ? எனின், அஃதையப்பாடேயாம். இஃதொருபுறங்கிடக்க:

இனி, உலகு எனுஞ் செந்தமிழ்ச் சொல்லைப் பற்றிச் சிறிதாராய்வாம். உலகு என்பது பல பொருள் பயக்கு மொழி யென்பர் சிலர். வேறு சிலர் வடமொழித் திரிபென்றும், இடத்தை யுணர்த்தும் உலகு எனும் மொழியும் வேறு, மக்களை யுணர்த்தும் உலகமெனும் மொழியும் வேறு என்றும் பகர்வர். "ஏழுலகத் தப்பாணின்ற பூரணன் காண்" என்பதனையும், "உலக முவப்ப வலனேர்பு திரிதரு, பலர் புகழ் ஞாயிறு" என்பதனையும் அதற்கெடுத்துக்காட்டாக்குவர்போலும். வடமொழிப்பற்றுடையார் ஆற்றலா லிருபொருள் பயக்குமன்றி (தனித்தனி மொழியன்றி) பலபொருளொரு சொல்லன்றெனச் சாதிப்பர்.

நச்சினார்க்கினியர் உலகம் (உலகு+அம்) என்னும் தமிழ்ச் சொல் என வுரைவகுத்துளார். லோகம் என்னும் வடசொல் திரிந்தே உலகம் என வந்தது எனச் சேனாவரையர் செப்புவர்.

"கால முலகம் உயிரே யுடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவு மன்ன
ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா வுயர்திணை மேன" தொல்—சொல்.

கிளவியாக்கத்தின்கணுள்ள வச்சூத்திரத்திற் கிவ்வாறாகவே இவ்விருவாசிரியரும் உரையுரைத்துளார்கள். ஆண்டிவ் வேறுபாடுகளறியக்

கிடக்கும் லோகம் எனும் வடமொழி திரிந்து தமிழில் உலகம் என வரும். அன்றி உலகம் என வாராது. ஆகலின், அஃதெவ்வாறாயினுமாகுக. 'உலகமென்ப துயர்ந்தோர் மேற்றே, நிகழ்ச்சி யவர்கட்டாகலான்' எனத் தொல்காப்பியத்தும், 'அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு' எனத் திருக்குறளினும், 'உலகமுவப்ப வலனேர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறு' எனத் திருமுருகாற்றுப்படையினும், 'உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்' எனத் தொண்டர்புராணத்தும், "உலகம் யாவையுந் தாமுள வாக்கலும், நிலைபெறுத்தலு நீக்கலு நீங்கலா, அலகிலாவிளை யாட்டுடையார்" எனக் கம்பராமாயணத்தும் வருகின்ற உலகமெனு மொழி குறிப்பது மக்கட்டொகுதியினையும் உலகத்தினையுமன்றோ? இவற்றினைக் கருதியே மேலங்ஙனம் தலைப்பிற்குப் பொருள்காணப்பட்டது. ஆகவே, உலகத்தின்கண் மக்கட்குச் சிறந்தபொருள் யாதென்பதும், உலகமானது கீழ் மேல் என விருதிறமாகப் பகுக்கப்பட்டவற்றுள் சிறந்ததாகிய உலகு யாதென்பதும் பற்றியே ஒரு சிறிதாராய்ந்து கூறுவல்; பிழையுள பொறுத்திடுமின்.

வகை வரலாறு:—ஆசிரியர் தொல்காப்பியர் 'நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும், கலந்த மயக்கம் உலகம்' எனக் கூறுவர். இதனாற் பெறப்படுவது நுண்பூத மைந்தும் பருப்பூத மைந்தனையுந் தோற்றுவிக்க, அப் பருப்பூதமைந்தும் உருத்திரிந்தாயதே உலகமாயிற்று; இஃது அண்டத்திற்கும் பிண்டத்திற்கு மொக்கும்.
'வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்' எ-ம்,
"அலங்கலிற் றோன்றும் பொய்ம்மை யரவெனப் பூத மைந்தும்
விளங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்" என்றும்
கம்பர் கூறுவர். இவற்றானும் புலப்படாநிற்கும் அஃது. "அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி" என்னும் பெரும்பாணாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியர் ஏனைப் பூதங்கள் விரிதற்குக் காரணமாகிய ஆகாயம் எனக் கூறுவர். இதனால், ஒரு பூதத்தினின்றும், ஏனைய பூதங்கள் தோன்றுகின்றன வென்பதும், மீண்டுந் தோன்றிய வண்ணமாகவே அப்பூதங்கள் ஒடுங்குகின்றன வென்பதும் ஒரு வகைக் கொள்கையாம் என்பது அந்நச்சினார்க்கினியர் கூற்றால் புலப்படுகின்றது.

"மண்டிணிந்த நிலனும், நிலனேந்திய விசும்பும், விசும்புதைவரு வளியும், வளித்தலைய தீயும், தீமுரணிய நீரும்" என்றாங் கைம்பெரும் பூதத்தியற்கை எனவரும் இப்புறநானூற்றடிகட்குப் பொருள், நிலன், ஆகாயம், வளி, தீ, நீர் எனப்பட்ட ஐவகைப் பெரும் பூதங்கள் என்பதாம். நுணுகியாயின் மேலவற்றோடு இக்கொள்கை முரணுமன்றோ? நுண்பூதமைந்தினின்றும் பருப்பூதமைந்துந் தோன்றுகின்றனவென்பதும், அவைகள் உருத்திரிதலாலேயே உலகமுண்டாயது என்பதும் சைவ சமயக் கூற்றாம். (சத்தாதி தன்மாத்திரை)



காரண தன்மாத்திரை யெனச் சூக்குமபூதங்கட்குப் பெயர் பொறித்தலே யங்ஙன மாதற்குரிய சான்றாம். இங்ஙனமாய பூதங்களின் குணமாகிய (அறிவே) புலமே சுவையொளியூறோசைநாற்ற மென்பன. இவைகளான் அறிவு மைந்தாயிற்று. அவற்றொடு மனனுணர்வாம் பகுத்தறிவும் ஒன்றுகூட்ட அறிவும் ஆறாகும். ஆகலான், உலகத்திடைப்பட்ட வுயிர்த் தொகுதிகள் அறிவு வகையான் ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர் என ஆறாயின. இவற்றினியல்களைத் தொல்காப்பியம், நன்னூல் முதலிய நூல்களிற் காணல் கூடும். ஆகவே, இவ் வுயிர்ப்பொருள்களும் இவ்வுயிர்ப்பொருட்கட் காதாரவான வுலகமும், ஒன்றையொன்று பற்றியனவாகவே காணப்படுதலின், உலகமானது அறிவுடைப்பொருளும் அஃதில்பொருளும் எனக் கூறப்படும் பரப்பினையுடைத்தாயிற்று.

மேலே ஐம்பூதக்கலப்பால் உலகமும் உயிர்த்தொகுதிகளும் ஆயின என்று கூறப்பட்டது. ஓரறிவுயிர் முதலியவைகட்கு ஐம்புலனுண்டன்றேயெனின், ஐம்புலனுக்கேற்ற பொறியின்மையின் இன்றென்க. மிகவும் ஆயற்பாற்று மிஃது. ஐம்பூதக் கலப்பாலாயது என்பதை மறுக்க முடியாது.

எல்லாம் வல்ல விறைவன் எல்லாவுயிர்கட்கும் உடல், கருவி, உலகம், நுகர்பொருள் (தனு கரண புவன போகங்கள்) ஆகிய நான்கனையும் கொடுத்தருளி யிருக்கின்றானாயினும் எல்லாப் பிறப்பினுஞ் சிறந்த மக்கட் பிறப்புற்ற வுயிர்கட்கே யிந்நான்கு முரித்தாகும். அறம்பொருளின்ப வீடுகளாகிய இம்மை மறுமை யம்மை யின்பங்களைத் துய்த்தற்குரிய பிறப்பதுவாகலின், புவனமென்றதே யுலகு என்று கூறப்பட்டது. இவ்வுலகிற்றோன்றி யிருவினைகளை யீட்டி யவற்றின் பயனை நுகர்ந்து, அவற்றினுவர்ப்புற்று, இருவினையொப்பு வரப்பெற்று, மலபரிபாகமுண்டாகி அருளுபதேசங் கிடைக்கப்பெறுங் காலமுமணித்தாகவுற்றுப் பின் ஞான முண்டாய் வீடெய்தற் குரியார் மக்கட் பிறப்பினரே யாவர் ஆகலானுமாம்.

உலக வரலாறு:—இதுகாறும் பலரும் பலபடக்கூறும் வரலாறு கூறப்பட்டுள்ளது. இனிச் சிறப்பாகச் சைவ சாத்திரங்கள் தத்துவம், புவனம், அண்ட முதலியனவாகப் பகுத்துரைக்கும் அவைகள், ஆகமங்கள் சைவசித்தாந்த சாத்திரங்கள் முதலியவற்றின் வல்லராய்க் கேட்டுத் தெளியற்பாலதாகலின் அவ்வரலாற்றினை யீண்டுத் தெளிக்கிலன். அண்டங்கள் பலதிறப்படும். அவற்றுள் பிரமாண்டத்தின் கீழ் ஏழுலகமும் மேல் ஏழுலகமும் உண்டென்பர். இடைப்பட்டதே பூவுலகம். இப்போது, கட்டுரைக் கெடுத்துக்கொள்ளப்பெறுவது பிரமாண்டப்பகுதிக் கட்டாகிய பூவுலகத்தையே. இப்பூவுலகு சிறந்ததாய தென்பது எங்ஙனமென வாராய வேண்டிய தின்றியமையாததாம்.

"கீழது, முப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டில்
நீர்நிலை நிவப்பின் கீழும் மேலது
ஆனிலை யுலகத் தானுமா ணுது" என்னும்

புறப்பாட்டினால் முதனுலகத்தைக் கூறிப்பின், ஏனையுலகங்களை விளக்குவர். இப்பிரமாண்டத்தினுள்ள பதினான்குலகினுள் இடைப்பட்டதாகிய கடலாற் சூழுண்ட பூவுலகமே (மண்ணுலகமே) மேலானதாம். ஏனைய வுலகங்கள் நல்வினையின் மேலீட்டாலும், தீவினையின் மேலீட்டாலும் எய்தற் குரியனவாம். இவ்வுலகமோ, இருவினைகளை யீட்டற்கும், இருவினைப்பயனைத் துய்த்தற்கும் உரித்தாயுள்ளது. இதனாலன்றோ ஏனைய வுலகங்கட்குப் புண்ணிய பாவ வுலகம் என்றும் பெயர் கூறி யிவ்வுலகத்திற்கு மட்டில் கருமபூமியென்று பெயர் கூறுவாராயினர் முற்றத் துறந்த முனிவரர்கள்.

இவ்வுலகமானது ஏழு பெருந் தீவுகளாகப் பகுக்கப்படும். அதனுட் சிறந்தது நாவலந் தீவு ஒன்றுமே. அது பல கண்டங்களாகப் பகுக்கப்படும். அதனுட் சிறந்தது பரதகண்ட மொன்றுமேயாம். அதனுட் சிறந்தது தென்னாடேயாம். இத்தென்னாடே, சைவ சமயந் தழைத் தோங்கப் பெற்றது. சைவசாத்திரங்கள் தோன்றப் பெற்றது. சைவசமயப் பெருந்தகையாளர்கள் பிறந்த சிறப்பு வாய்க்கப் பெற்றது. ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமுடைய உயிர்கட்கு, இறைவன் அருவனும், உருவனும், அருவுருவனுமாய் நின்று அருள்புரியும் மேன்மை யெய்தப்பெற்றது. செந்தமிழ் மணமும் வீசப் பெற்றுத் திகழ்வுறுவது. இறந்துபட்ட மொழிகளை இறந்துபடா மொழிகளாகச்செய் துயிர்ப்புறச் செய்த வுயர் வுடையது. வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்னுந் திசைகளைப் பற்றிச் சிறிதாராய்வாம். வடு+கு, கீழ்+கு, மேல்+கு, தென்+கு எனப் புணர்ந்த தனித்தமிழ் மொழிகளாம். கூரியவிடம், கீழிடம், மேலிடம், விரிந்தவிடம்எனப்பொருளாம். வடக்கு, தெற்கு என்பன விரண்டும் பெருந்திசைகளாம். கிழக்கு, மேற்கென்பன விரண்டும் அதனுறுப்புக்களாம். கூரிய விடத்தினின்றும் விரிந்தநிலை யெய்தியது தெற்கேயாம் எனக் கோடற்கு இவ்வாராய்ச்சிப் பெருகுமாதலினிம்மட்டி னிறுத்தி மேற் செல்லுதும். நம் மணிவாசகப் பெருந்தகையாரும் இது கருதியே 'தென்னாடுடைய சிவனே போற்றி' யென்று திருவாய் மலர்ந்தருளியிருப்பர்போலும்; ஆகலான், ஒருடம்பிற்கு முகம் சிறந்த வுறுப்பாதல்போலப் பிரமாண்டத்திலும் சிறந்த முகமாய்த் திகழ்வது தமிழ்நாடொன்றுமே யென்றற்குத் தட்டுமுண்டோ!

இதுகாறும் உலகிற் சிறந்தது பூவுலகமென்றும், அதனிற் சிறந்தது தமிழ் நாடொன்றுமே யென்றும் சிறிதாராய்ந்து கூறினேன். இனியிரண்டாவது பொருளாகிய உலகிற் சிறந்தபொருள் யாதெனச் சிறிதாராய்ந்து கூறுவம்.

உ

# மங்கையர்க்கரசியார் அன்பின் மாண்பு.

(காஞ்சிபுரம், திரு. வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள்.)

திருச்சிற்றம்பலம்

"மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால் வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த ஆலவா யாவது மிதுவே.

திருச்சிற்றம்பலம் (திருஞானசம்பந்தர்)

எனத் தமிழ்வேதம் புகழ்ந்து துதிக்கும் பெருமையினைவாய்ந்த பாண்டிநாட்டுக் கோப்பெருந்தேவியாகிய இவ்வம்மையாரின் அன்பின் பெருமையையும் அரியகுணங்களையும் அறியாதார் நமது தமிழ்நாட்டில் ஒருவருமில்லையென்றே சொல்லலாம். இவரது சிறப்புவாய்ந்த வுயரிய குணங்களை நோக்கியன்றோ 'மங்கையர்க்கரசியார்' என்னுந் திருநாமம் வழங்கினர் போலும்?

'நின்றசீர் நெடுமாறன்' என ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளாற் சிறப்பித்துக் கூறப்பெற்ற கூன்பாண்டியனது மனைவியாராயமைந்த இப் பெருந்தகையார் ஒருசமயம் சமணக்காடான் மூழ்கி புறச்சமய விருள்சூழ்ந்து நிலைகுலைந்திருந்த பாண்டிநாட்டைச் சித்தத்தைச்சிவன்பாலே வைத்த தமது அன்பின் பெருக்கினால் பூதி சாதனவழி நிறுவி, சைவசமயப் பயிரானது தழைத்து வளர்ந்தோங்குமாறு பக்தியெருவிட்டு அன்புநீர் பாய்ச்சிச் சிவமணம்பெருகித் திருவுறச்செய்து நன்னிலைமைக்குக் கொண்டுவந்தனர். என்னே! இவ்வம்மையாரின் சைவப்பற்று!! அன்பின்பெருக்கு!!! அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகச்சிவாலயங்களிலமைத்து இவரது திருவுருவத்தை வணங்குதலே இவர்களின் பெருமையை நன்கு விளக்குவதாகும். மாதருலகத்துக்கு மகத்தான பெருமையை வாரி வழங்கிய இவ்வம்மையார் சமணர்களது துர்ப்போதனையில் மூழ்கிய தனது நாயகனது சீற்றத்துக் காளாகாமல், தானும் சமணர் புன்சமயத்தைக் கைக்கொண்டவர்போ லபிநயித்து அரனிடத்தன்பு மீக்கூரு முளத்தளாய், விபூதி ருத்திராக்க சிவசின்னங்களைக் கரவி லணிந்து கொண்டு அஞ்செழுத்துன்னும் நெஞ்சத்தினராய், பாண்டிநாடு எப்போது பழைய நிலையை யடையுமென்று சிவபெருமான் றிருவருளை நாடிவந்தனர். 'மனம் போல மாங்கல்யம்' என்னும் ஆன்றோர் முதுமொழிக்கேற்ப, சிவதரிசனார்த்தம் கூடல் நாயகன் கோயிலெய்திய அந்தணாளரொருவரை நமது அம்மையார் சந்திக்கவும், அப் பூசுரரால் சிவபெருமான் றிருவடிக்கே பதித்த நெஞ்சமுடையவராய் விளங்கும் நமதுபுகலிப் பெருந்தகையாராகிய ஸ்ரீ ஆளுடைய பிள்ளையாரின் தெய்வீகத் திருவவதாரம், திருமுலைப்பாலுண்டது, கவிபாடு மாற்றலும்பொற்றாளமும் பெற்றது, திருமறைக்கதவந் திறந்தது முதலிய அற்புதச் செயல்களனைத்தையும் நன்குமொழியக் கேட்டு, மெய்ம்மயிர் பொடிப்ப, தேகம் புளகாங்கிதங்கொண்டு கற்றாவின் மனம்போலக் கசிந்துருகுஞ் செயலினராய்த் தலையன்பின்பாற்பட்டு, சேயினைக் கண்ட தாய்போல், தமது செவ்விய கொங்கைகளிரண்டும் பருத்துப் புடைத்து விம்மி நிமிர்ந்து பால்சுரந்து நாநாதிசைகளிலும்

கார் காலத்து மழைபோல் வீசத்தொடங்கிற்று. என்னே! இவ்வம்மையாரின் உள்ளன்பு. உலகீன்ற அம்மையாராகிய நமது உமாதேவியார் கூட ஆளுடையபிள்ளையார் பொய்கைக்கரைவாய்ப் பண்டையவுணர்வு தோன்றி யழுகின்ற காலத்தில் இயற்கையாய்ப் பொழிதலின்றிச் சிவபெருமான் உணர்த்திய பின்னரே, தமது திருமுலைகளினின்றும் ஞானவமுதைப் பீச்சிப்பொன்வள்ளத்தெடுத்தூட்டினர். நமது மங்கையர்க்கரசியாரோ திருவுருவைக் காணாத முன்னரே கேள்விப்பட்ட மாத்திரத்தில் எவ்வளவோ கரைகடந்த அன்பினுருவாய் விளங்கினர். ஈதன்றோ தலையன்பு? இவரது அன்பின் பெருமையைப் புகழவந்த நமது கற்பனைக்களஞ்சியமாகிய சிவப்பிரகாச சுவாமிகள்,

"இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின்—நிலைவிளம்பக்
கொங்கைச் சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா!
இங்குயர்ந்தா ளார்சொ லெனக்கு."

என்றுவெகு அழகாக எடுத்துக்கூறி யிருக்கின்றனர். இவரது கரைகாணாத தலையன்பன்றோ, பாண்டிநாட்டைப் பூதிசாதன வழியில் நிறுவியது. வெப்புநோயகற்றிக் கூன்பாண்டியனைச் சௌந்தர பாண்டியனாக்கியது. சமணரெண்ணாயிரவரைக் கழுவேற்றியது. சமணப் படுகுழியினின்றுந் தம்பதிகளிருவரையுமீட்டு, இன்பவாரிதியில் மூழ்குவித்து முத்தியங்கரையிற் சேர்த்தது. என்னே! இவரின் அன்பின்மாண்பு!. 'அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே' என்னுந் திருமூலர் திருவாக்கிற் கிலக்கியமா யமைந்தவர்கள் நமது அம்மையாரவர்களே யாவர். இத்தகை யன்பின் களஞ்சியமாக விளங்கிய வீரத் தாய்மார்களனேகரிருந்த நமதுநாட்டில் இப்போது கற்பெனும் பொற்பிலாப் பேதையர்களாகிய கன்னெஞ்சக் காரிகையார்களே மிகுந்து காணப்படுகின்றனர். ஜீவகாருண்யம் அன்பு என்பது இவர்களிடம் மருந்துக்குக்கூடக்கிஞ்சிற்றுமில்லை. என்னே! காலத்தின்கோலம்! நமதுதாய்நாடு நலனுற வேண்டுமானால் மேற்கூறிய தலை அன்புள்ள வீரத்தாய் பலர் தோன்றவேண்டும். அவர்களால் கல்வியறிவுள்ள வீரமக்களும், அவர்களால் நமது தேசமும் முன்னேற்றமடையும்.

ஆதலால், சகோதர சகோதரிகளே! அன்புநெறியின் பெருமையை யுலகினர்க்கு வெளிப்பட நடத்திக்காட்டிய பெண்ணருங்கலமாகிய இவ் வம்மையாரைப் பின்பற்றி சகல ஜீவர்களிடத்து மன்புடையவர்களாய், நமது சைவசமயப்பெருங்கடவுளாய் விளங்கும் ஸ்ரீசிவபெருமான்பால் மாறாப் பேரன்புடையவர்களாய் பக்திநெறிவழாது மிக்க சிரத்தையுடன் வழிபாடாற்றி இம்மை மறுமை நலனெய்தவும், முத்திப்பேறடையவும் முன்வருவீர்களாக! சிவமே துணைபுரிக.

"செந்துவர் வாயாள் சேலன கண்ணாள் சிவன்றிரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி பணிசெயப் பாரிட நிலவும்
சந்தமார் தாளம் பாம்புநீர் மத்தம் தண்ணெருக் கம்மலர் வன்னி
அந்திவான் மதிசேர் சடைமுடி யண்ணல் ஆலவா யாவது மிதுவே."

திருச்சிற்றம்பலம். (திருஞானசம்பந்தர்)

---

உ

# சைவத் திருமுறையும் அதனை ஓதுந்தன்மையும்.

(காஞ்சீபுரம், திரு. அ. முத்தையபிள்ளை அவர்கள்.)

சைவநன் மக்களால் பெரிதும் போற்றித் துதித்தோதத் தக்கதும், சிவபெருமானது திருத்தொண்டர்கள் அருளிச்செய்தவைகளுமாகிய சைவத்திருமுறைகள் பன்னிரண்டாகும். அவை, ஸ்ரீசம்பந்தர் தேவாரம் 3 திருமுறைகள், ஸ்ரீஅப்பர் தேவாரம் 3 திருமுறைகள், ஸ்ரீசுந்தரர் தேவாரம் 1 திருமுறை ஆகத் தேவாரம் 7 திருமுறகள். திருவாசகம் 8-ஆம் திருமுறை. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாந்திருமுறை. திருமூலர் திருமந்திரம் 10-ஆம் திருமுறை. திருவாலவாயுடையார் திருமுகப் பாசுர முதலிய 40 பிரபந்தங்கள் அடங்கியவை 11-ஆம் திருமுறை. இப்பதினொருதிருமுறைகளும் அபயகுலசேகரசோழபெருமான் வேண்டுகோட்படி திருநாரையூர்ப்பொல்லாப்பிள்ளையா ரருள்பெற்ற நம்பியாண்டார் நம்பி யவர்களால் வகுக்கப்பட்டன. ஸ்ரீசேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய 'பெரியபுராணம்' பனிரண்டாந் திருமுறையாக, அநபாய சோழ மகாராஜனால் அமைக்கப்பட்டது.

சிவபெருமான், சதாசிவ மூர்த்தியின் திருமுகங்களி னின்றும் இருக்காதி நான்கு வேதங்களையும், காமிகாதி இருபத்தெட் டாகமங்களையும் தோற்றுவித்தருளினாற் போலவே, சிவபெருமான் திருஞான சம்பந்தராதி நாயன்மார்கள்பால் அதிட்டித்து நின்று திருமுறைகளைத் தோற்றுவித்தருளினர். இதனை 'எனதுரை தனதுரையாக' என்னும் ஆளுடையபிள்ளையா ரருண்மொழியாலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு 'பித்தா' என்றும், 'தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்' என்றும், சேக்கிழாருக்கு 'உலகெலாம்' என்றும் இறை அடியெடுத்துக் கொடுத்திருப்பதாலும் அறியக்கிடக்கின்றது. திருமுறைகள் தன்னுரை யாதலை விளக்கவே திருவாசகத்தைத் தாமே எழுதிமுடித்தார். இதனாலும் இவ்வுண்மை வெளிப்படை. திருமுறைகள் பாடியருளிய நாயன்மார்கள் பசுகரணமின்றிப் பதிகரணத்தர்களாய் நின்று பாடினமையின் அவைகள் பதிவாக்கேயாகும். பதிகரணத்தராய் நின்று பாடினமை,

"பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தங்
கரணம்போ லல்லாமை காண்."

"என்பைப்பெண் ணாக்கி யிரும்பாலை நெய்தலாய்
உம்பர் மகிழ்ந்திடவன் றோதியதும்—தம்பிரான்
கதவ மடைக்கக் கழறியது மெல்லாம்
பதிகரண மென்றுணரப் பா."

"அரவங் கடித்திறந்தா னாருயிரை மீட்டும்
திருமறைக்காட் டிற்பின் றிறந்தும்—கரமலையை

' நீற்றறையை வேகமற நீராகப் பாடியதும்
கூற்றுதைத்தான் போதமெனக் கொள்."

என்னுஞ் செய்யுட்களால் நன்கு விளங்கும்.

திருமுறைகளை வேதங்களுக் கொப்பிடலாம். வேதத்திற்கு மூலம்பிரணவம். வேதமுழுவதும் பிரணவப் பொருளையே கூறுநிற்கும். அதுபோன்றேஇத்திருமுறையாரம்பத்தில் 'தோடுடைய செவியன்' என'ஓ'காரமும், திருமுறைமுடிவில் 'நின்ற தெங்கும் நிலவியுலகெலாம்' என 'ம்' என்பதும் ஆகப் பிரணவப்பொருளை யுள்ளடக்கி விளங்குகின்றன. ஆரியவேதம் பஸ்மசாபாலோபநிஷதத்தில் விபூதியின் பெருமை விளக்குதல் போல் இத் திருமுறைகளிலும் 'மந்திரமாவது நீறு' முதலிய பதிகங்களால் விளக்கப் பட்டிருக்கிறது. வேதத்திற் பாசுபதாதி உபநிஷத்துக்களில் கூறுவது போலவே திருமுறைகளிலும் 'சிவனே பரம்பொருள்' எனக் கூறப்படுகின்றது. பதி பசு பாச விலக்கணமுங் கூறப்பட்டிருக்கிறது. இத் தகைய காரணங்களானும், 'தாழ்ந்தெழுந்து தமிழ்வேதம் பாடினார் தாளம் பெற்றார்' 'தமிழினால்வேதம் பாடினார்' 'மறைகளாகிய நான்குமென மலர்ந்த செஞ்சொற் றிருப்பதிகம்' என்னும் சேக்கிழார் பெருமான் திருமொழிகளானும் திருமுறைகளைத் தமிழ்வேதமென்று சந்தேகமறச் சாற்றலாம்.

திருவாசகத்தை விதந்து கூறவந்த நமது சிவப்பிரகாசர்,

"................... மதுர வாசகம்
ஓதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே."

"வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கல் மனமுங் கரைந் துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
யன்பதை யுலகின் மற்றைய ரிலரே"

என வேதத்தினும் இத்திருமுறை சிறந்ததாகப் போற்றுகின்றனர்.

சிவபெருமானுக்குத் தூலசரீரம் மந்திரம், சூக்குமசரீரம் ஆன்மா, அதிசூக்கும சரீரம் சத்தியென ஆகமங்க ளறையும். திருமுறைகள் பஞ்சாக்கர முதலிய மஹாமந்திரங்களை யுள்ளடக்கி, மந்திர வடிவாகிய வேதங்களோ டொப்புடைமையால் திருமுறைகளினிடத்துஞ் சிவபெருமான் சாந்நித்திய முற்றிருப்பர். செம்புமுதலிய உலோகங்களில் சிவசாந்நித்திய முண்டாக்க மந்திரந்யாசஞ் செய்யவேண்டும். அஃதின்றியே திருமுறைகளில் சதா சிவசாந்நித்தியம் விளங்குகின்றது.

இறைவனது ஐந்தொழில்களையு மித் திருமுறைகள் இயற்றவல்லன. இதனுண்மை நாயன்மார்களது சரித்திரத்திற் பரக்கக் காணலாம். என்புக்குயிர் கொடுத்தது, வெங்கராவுண்ட பிள்ளையை நல்கியது முதலியன சிருட்டி. திருப்பாச்சிலாச்சிரமத்தில் முயலகன் என்னும் நோய் நீக்கிக்காத்தது திதி. புத்த நந்தி தலையில் இடிவிழச் செய்தது சங்காரம். தருமபுரத்தில் திருப்பதிக இசை யளவுபடாவகையை உலகத்தாரறிய யாழ்மூரிப் பதிகம் பாடி அப்பதிகம் யாழிசையில் அடங்காமற் செய்தது திரோபவம். நல்லூர்ப் பெருமணத்தில் எல்லோரையும் மோக்ஷத்திற் சேர்த்தது அனுக்கிரகம். இத்திருமுறைகள் ஐந்தொழிலியற்று மாற்றலுள்ளன வாதலின் அதனையோதுவார்க் கெண்ணிய வெண்ணிய வாறு மென்பதற்கோர் ஐயமுமுண்டோ?



அன்றியும், சமண் முதலிய புறச்சமயவாதிகளால் சைவசமயம் அழிந்துபோகாதபடி நிலைபெறச் செய்ததும் இத் திருமுறைகளே. சமயகுரவர்களாதியோர் தோன்றியிராவிடின் சைவசமயமே அழிந்துபோயிருக்கும்.

"சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே? மாமறைநூ லெங்கே?
எந்தைபிரா னஞ்செழுத்தெங் கே? "

ஸ்ரீசம்பந்தர் பாடலால் திருமால் சிவசாரூபம் பெற்றதாகக் காஞ்சிப்புராணம் கூறுகிறது. இதனால் திருமுறை யோதுவோர் கேட்போர் சிவசாரூபம் பெறுவர் எனப் புலனும். இத்தகைய அருமை பெருமை வாய்ந்த தேவாராதி திருமுறைகளை விட்டு, சிந்துமுதலிய தந்தனப் பாட்டுகளை விரும்பி யோதுவோர் கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவ ராவர். இத் திருமுறைகளின் பெருமைகள் எண்ணிலடங்காதனவா யுள்ளன வாதலின் விரிவஞ்சிவிடுத்து அதனை ஓதுந் தன்மையைச் சிறிதுரைப்பாம்.

திருமுறை யோதத் தக்கவர் விபூதி யுருத்திராக்க மாதிய சிவசின்னங்களணிந்தவராயும், மாமிசபோசன மில்லாதவராயும், மதுபானமில்லாதவராயும், சிவதீக்கை பெற்றவராயுமுள்ள சைவரே யாவர். 'பந்தமார் தமிழ் பத்தும் வல்லார் பத்தராகுவரே' என்றபடி திருமுறை யோதினரே சிவனடியாராவார். ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரம்தரித்து நெற்றியிற் சிவசின்னந்தீட்டி, கோமயத்தால் மெழுக்கிட்ட தரையிற் சுத்தபீடமிட்டு அதன்மேல் திருமுறைகளை வைத்து மலரிட்டருச்சித்து நைவேத்தியம் செய்து கர்ப்பூரம், சந்தனம், அகில், குந்திருக்கம், குக்குலு முதலிய பஞ்சதூபங்களிட்டு, அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணி முறைப்படி ஆசானால் கொடுக்கப்பெற்று, ஆசனத்தில் வடக்கு அல்லது கிழக்கு முகமாகவமர்ந்து, சொற்குற்றம், பொருட்குற்றம், இசைக்குற்றம் முதலியன உண்டாகாதபடி இன்னிசையோடு ஓதல் வேண்டும். முறைபிறழ்ந் தோதலும் இடையில் ஏனையோரது பாடல்களை யோதலும் குற்றமாம். திருமுறையோதல் சுத்தாங்கம், லயாங்கம் என இருவகையாம். தாளமின்றிப் பண்ணுடன் பாடுவது சுத்தாங்கம். பண்ணோடு தாளமிட்டுப்பாடுதல் லயாங்கம். 'இன்னிசையாற் பாடவல்லார் இருநிலத்தில் ஈசனெனு மியல்பினோரே." என்பதால் திருமுறைகளை இசையோடு பாடுதலே ஏற்றதாம். பொருள்பட ஓதுவதாய் எண்ணிச் சீரைக் கெடுத்தலாகாது. 'சம்பந்தன் உரைபங்கம் நீங்கப் பாடவல்ல பத்தர்கள் பாரிதன்மேற், சங்கமோடு நீடிவாழ்வர்

தன்மையினுலவரே' 'காழியர்கோன் நவில் பத்தும் ஊனமின்றி உரை செய்ய வல்லார்' என்னுந் திருக்கடைக்காப்புச் செய்யுளானுணர்க.

இங்ஙனம் திருமுறைகளுக்கு நித்திய நைமித்திக பூசைபுரியின் அப்பூசை இறைவனுக்குப் புரிந்ததாகும். இப்பூசையானது சிவபூசைக்கும் அடியார்பூசைக்கும் அதிகமாமென்க. திருமுறைகளின் பெருமையறிந் தோதிவரின் நோய், களவு, வறுமை முதலிய துன்பங்கள் தொலையும். மாரி வளம்பெருக்கும். கோடி சிவலிங்கப் பிரதிஷ்டை செய்த புண்ணியப்பலன் கிடைக்கும். முடிவில் பிறவாப் பெருஞ்செல்வமாகிய பேரின்பம் வாய்க்கும். ஆதலால், நம்நாட்டுச் சைவாபிமானிகள்,

'மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே'
'சிந்தைசெய்து பாடவல்லார் சிவகதி சேர்வாரே'
'விளங்கும் புகழத னோடுயர் விண்ணும் உடையாரே'

(சம்பந்தர்)

'பாடவல்லா ரல்லலொடு பாவமிலர் தாமே'
'பாடவல்லார் பரலோகத் திருப்பது பண்டமன்றே'
'சீரூர் பாடவல்லார் சிவலோகஞ் சேர்வாரே.'

(சுந்தரர்)

என்னும் ஆசிரியர்களின் அருளாணையைக் கடைப்பிடித்து விதிப்படி திருமுறைகளை யோதிப் பெருமையொடு வாழ்ந்து பிறவா முத்தியைப் பெறுவாராக.

திருமுறைத் தமிழும் சைவமுஞ் சிறக்க!

---

## முக்கிய வினா.

ஸ்ரீசர்வக்ஞ சிரோமணி சுந்தரமூர்த்தி சுவாமிகள், "முப்பொழுதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்" என்றபடி, சிவாலயத்தின்கண் நித்திய பூசாதி சத்காரியங்களைச் சர்வஜீவோபகாரமாய் இயற்றும் பரமாசாரியர்களான ஆதிசைவர்கள்,

1. எத்தகைய கோத்திரத்தில் அவதரித்தவர்களாய் இருக்கவேண்டும்?

2. அத்தகைய கோத்திரங்களின் சங்கியைகளும் நாமதேயங்களும் எவை?

3. கூறிய கோத்திரங்களின் உற்பத்தி முதலாக நிகழ்ந்த விசேஷங்கள் எவை?

என்னும் இவற்றிற்கு ஏற்றவிடையைப் பிரமாண பூர்வகமாய் இச் சிவநேசன் வாயிலாக அறிஞர்கள் வெளியிடின் மிக்க உதவியாகும்.

ஒரு அன்பர்,
கீழ்சாத்தம்பூர்.

---

## ஏகாதசி விரதம் சைவர்களுக்கும் உரியதே.

(காஞ்சிபுரம் திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள்.)

நீர்வளம் நிலவளம் குடிவளமாகிய மூவகை வளங்களாலும் மிகச்சிறப்புற்று விளங்கும் நம் இந்தியதேசத்தில், 'சோமவார விரதம்' எப்படி மிகச் சிறந்ததாக நமது சைவநன்மக்களால் பெரிதுங் கொண்டாடப் பெறுகின்றதோ, அஃதேபோல் 'ஏகாதசி' விரதமும் வைணவ சகோதரர்களால் மிகவும் விழுமியதாகக் கொண்டாடப்படுகின்றது. ஏகாதசி யென்பது மிகவும் உத்தமமான புண்ணியகாலம், பரமாத்மாவுக்குப் பிரியமான திதி. இதைப்போற்றாத புராணமில்லை; துதிக்காத தர்மநூலில்லை. இது மாதங்களிற் சிறந்ததாய் விளங்கும் மார்கழிமாதத்தில் சுக்கில பக்க ஏகாதசி திதியில் பெரும்பான்மையும் வைதிக வைணவ சகோதரர்களாலும், சிறுபான்மை சைவ சமயிகளாலும் அனுஷ்டிக்கப்படுகின்றது. இதனை வைகுண்ட ஏகாதசி யென்றுங் கூறுவார். தவிர, ஒருவருஷத்தில் இருபத்துநான்கு வேறு ஏகாதசிகள் இருப்பதால் இதனைப் பெரிய ஏகாதசியென்றுங் கூறுவதுண்டு. இத் திதிகளில் உபவாசமிருந்து விதிப்படி அச்சுதனையர்ச்சிப்போர் வைகுண்டஞ் சேர்வர். மோக்ஷமடைவர். அவர்களது மூதாதையர்களுங்கூட முத்தி பெறுவரென்று வைணவாகமங்கள் முறையிடுகின்றன. இவ்விரதம் விண்டுவைக்குறித்துச் செய்யப்படுவதென்றும், இது தமது சமயத்தினர்களுக்கே யுரியதென்றும் சில வீரவைணவ சிகாமணிகள் வீண்வாதம் புரிகின்றனர். உண்மையாராயுமிடத்து இவ் வேகாதசி விரதம் சைவ வைணவ சமயத்தார்களாகிய இருபாலார்க்குமே சமவுரிமை யுடையதென்பதும், பேதாபேதமின்றி இதனையனுஷ்டிக்க விருபாலாருங் கடமைப்பட்டவர்களென்பதும் உள்ளங்கை நெல்லி போல் தெள்ளிதின் விளங்கும். தவிர, பகவானே ஆறுவயது சிறுவர்முதல் அறுபது வயது விருத்தாப்பியர்கள்வரையில்யாவரும் பேதாபேதமின்றிப் பக்திசிரத்தை வைராக்கியத்தோடு அவசியம் இவ்விரதத்தை யனுஷ்டிக்க வேண்டுமென்று ஆணையிட்டுக்கூறியிருப்பதாக ஏகாதசி மகத்துவங் கூறுகின்றது.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற திருக்குறளாசிரியர் கருத்துப்படி இதனுண்மை யாராய்வாம்.

நரை, திரை, மூப்பு, சாக்காடு நீக்குவான் வேண்டி அமுதம் பெறத்தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடித் திருப்பாற்கடலைத்தாழியாகவும், வாசுகியை நாணாகவும், மந்தரமலையை மத்தாகவும் நிறுவித் தேவர்களொருபுறமும் அசுரர்களொருபுறமுமாக நின்று கடலைக் கடைகின்ற காலத்தில், கணபதி வழிபாடின்றிக் காரியந் தொடங்கப் பெற்றதால், அக் கடலினிடத்தே கொடிய ஆலகால விடந் தோன்ற, அதனை எல்லாம்வல்ல பெருமானாகிய நமது கண்ணுதற்

கடவுள், தேவர்களும் அசுரர்களும் உய்யும்பொருட்டுக் காருண்யத்தினாற் றாமே யுண்டு கண்டத்தில் நிறுத்தித் 'திருநீலகண்டர்' என்னும் திருநாமமுற்றனர். இவ்வாறு விடத்தை யுண்டதனால் பெருமான் றாமொரு தீமை அடைந்தன ரில்லையாயினும், ஓர் திருவிளையாடல் செய்யக்கருதி, ஒரு க்ஷணப்பொழுது ஒன்றுங் கூறாராய், உமாதேவியார் தம்மையுபசரிக்கும்படி மௌனமாய்ச் சயனித்திருந்தனர். அதுகண்ட திருமா லுள்ளிட்ட சுரர்கள் பெரிது மஞ்சிப் பெருமானுக் காபத்து விளைந்ததென்று கருதி 'அவனருளாலே யவன்றாள் வணங்கி' என்றபடி திருவருளை நாடி அப்பெருமானையே பக்தி சிரத்தை வைராக்கியத்தோடு மிகவும் அன்புட னருச்சித்தனர். அத்திதியை ஆன்றோர் 'ஏகாதசி' என்பர். அற்றைய நாள் முற்றும் உணவில்லாது, அன்றிரவெல்லாம் நித்திரையின்றி விழித்திருந்து பூஜித்து, மறுநாளாகிய துவாதசியிற் பண்ணவர்கள் பாரணஞ்செய்தனர். இந்த ஐதீகத்தைக் குறிக்கும் விழாவே சைவர்களாலும் வைணவர்களாலும் 'ஏகாதசி விரதம்' என மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. சிவபெருமான் ஏகாதசியில் விஷமுண்டாரென்பதனை,

"பொங்குகங்கா தரன்காள மயின்றே யொன்றும்
புகலாம லிருந்தனனோர் கணப்பொழுது புலவோர்
அங்கவனை யிடைவிடா தருச்சனைமுன் புரிந்தார்
அத்திதியே காதசியாம்"

என்னும் ஆகமத் திரட்டா லுணர்க. பின்னர், துவாதசிக் கடுத்த திதியாகிய திரயோதசியிற் சிவபெருமான் பர்வதராஜபுத்திரியாராகிய உமாதேவியாரை நிறுத்திச் சூலத்தைச் சுழற்றிக் கையிற்றமருகமேந்தி மாலைக்காலத்தில் ஒருசாமபரியந்தம் நிருத்தஞ் செய்தனர், திருமாலாதி தேவர்கள் முதன்முதலாக அவ்வானந்தத் தாண்டவங் கண்டு இஷ்டசித்தியும் முத்திப்பேறும் பெற்றனர். சிவபெருமானுக்கு முதலடியாரும் மும்மூர்த்திகளி லொருவருமாகிய திருமாலானவர் அவ்வேகாதசி திதியில் நிர்மலமாக விருந்து நித்திரையின்றி விரதமனுட்டித்துத் துவாதசியிற் பாரணஞ்செய்தமையால், கண்ணனடியார்களாகிய வைணவர்களும் தம்மாத்மார்த்த வழிபடுகடவுளாகிய விஷ்ணு மூர்த்தியைக் குறித்து, அவருவக்குமாறு விதிப்படி இவ் வேகாதசி விரதத்தை யனுஷ்டிக்க லாயினர். இதுவே நம் வைணவ சகோதரர்களுக்கு இவ்விரதம் உரித்தான வரலாறு. ஒருவகையிற் பார்க்கு மிடத்து இவ்விரதம் முக்கியமாகச் சைவர்களுக்கே உரிமையுடைத் தென்று துணிந்து கூறலாம். எனினும், பொதுவாகநோக்குமிடத்து இவ்விரதம் சைவவைணவ சகோதரர்களாகிய இருபாலார்க்கும் உரித்தென்பதே நேர்மையுடைத்து. இக்காலத்துச் சமநோக்குடைய சில சைவர்கள் இவ்விரத மனுஷ்டித்தல், இதற்குப் போதிய சான்றா யமையும்.



இவ்விரத மனுஷ்டிப்போர் தசமியிலும் துவாதசியிலும் ஒருவேளை போசனந்தான் உண்ணுதல் வேண்டும். ஏகாதசியன்று அதிகாலையிலெழுந்து பிராதக்காலத்தில் நீராடி நித்திய கருமங்களை விதிப்படி செய்துமுடித்தல் வேண்டும். ஏகாதசியன்று துளசிதளம் பறிக்கலாகாது. ஆதலால், முதல் நாளே பூசைக்கு வேண்டிய அளவு அதை எடுத்துவைத்துக் கொள்ளவேண்டும். மகாவிஷ்ணுவுக்குவேதவிதிப்படி பூசை செய்யவேண்டும். சக்தியிருப்பின் அன்று உபவாசமாக விருப்பது உத்தமம். பகலில் தூங்கலாகாது. இரவில் பகவத்பஜனை அல்லது புண்ணிய கதாசிரவணம் முதலியவைகளால் கண்விழிக்கவேண்டும். ஏகாக்ர சித்தமாய்ப் பகவானைத் தியானஞ் செய்யவேண்டும். சதா அவர் திருநாமத்தை அன்புடன் உச்சரிக்கவேண்டும். துவாதசியன்று காலைக்கடனாற்றிப் பகவத்பூசை செய்து ஓர் அதிதிக் கன்ன மளித்துப் பிறகு புசிக்கவேண்டும். இங்ஙனம் விதிப்படி உபவாசமிருப்பதால் முதலில் தேகாரோக்கியமும் செல்வமும் உண்டாகும்; பாபமகலும்; சந்ததி பெருகும்; சுவர்க்கம் கிடைக்கும்; மனம் நிர்மலமாகும்; ஞானம்சுரக்கும்; முடிவில் மோக்ஷானந்தப் பிராப்தியு முண்டாகும்.

நிற்க: மதப்பற்று மிக்குள்ள பல சைவர்கள் இவ் விரதத்தினுண்மை யுணராது இதனைப் புறக்கணிக்கின்றனர். திருமாலை இகழ்தல், சிவனை இகழ்ந்ததாகவே யமையும். இதனை,

"ஊற்றிருந்து நறவொழுகுந் துளவத் தாரோ
யுனையிகழ்ந்தோ ரெனையிகழ்ந்தோ ரென்று கூறி
யேற்றையிருங் கொடியுயர்த்த செக்கர் வேணி
யிறைவனுயர் தடங்கயிலை யெய்தி னானே."

என்னுங் காசிகாண்டச் செய்யுள் விளக்குவதால், 'அரியுஞ் சிவனுமொன்று' என்னு முண்மை நிலைக்கும்.

"அரியலாற் றேவி யில்லை ஐயனை யாற னார்க்கே"
"சீரேறு திருமாலோர் பாகத் தான்காண்" என்னுந்தேவாரமும்,

"......அரனார்க் கரிதிருத் தேவி யின்றேல்,
அரிக்குப் பொருளுரை யீர்கெடு வீர்நும் மறிவின்மையே"

என்னும் இரட்டையர் வாக்கும் நன்கு வலியுறுத்தும்.

ஆகையால், சைவசமயச் சீரியர்களே! சிவபெருமான் ஆலகாலவிஷத்தை யயின்று தேவர்களையும் அசுரர்களையுங் காத்தருளினமையை யுணர்த்தும் புனிதமிகுந்த இவ் வேகாதசி விரதத்தை சிவபெருமானும் திருநெடுமாலும் உவக்குமாறு விதிப்படி யனுஷ்டித்து இஷ்டகாமிய சித்தியடைந்து, முடிவில் நிரதிசயானந்த முத்திப் பேறாகிய மோக்ஷத்தையு மடைய முன்வருவீர்களாக! இதற்கு எல்லாம் வல்ல நம் சிவபெருமான் திருவருள் துணைபுரிவதாக.

# சிவஸ்ரீ சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் வினாவுக்கு விடை.

ஐய! ஸ்ரீமுகவருஷ மாசித்திங்கள் சிவநேசனில், தாங்கள் 'மகா சிவராத்திரி' எனத் தலையங்கம் புனைந்தெழுதியதில்,

1. ஆகமங்களால் சிவராத்திரி உத்தமம், மத்திமம் என இருதிறனுடையது.

2. இவ்வருடப் பஞ்சாங்கங்கள் மாசி ௧௨ மகாசிவராத்திரி என்பதின் ஏது இன்னதென்பதைத் தெரிவிக்க வேண்டும்.

3. ஆனந்த வருடத்தில் பஞ்சாங்கங்கள் கூறியதற்கு மாறுபாடாக எல்லா க்ஷேத்திரங்களிலும் மகா சிவராத்திரி கொண்டாடப்பட்டிருக்கிறது.

என்று கூறியிருக்கின்றீர்கள்.

"மாக மாமதிச் சிவநிசி வரன்முறை நோற்றுச்
சோக மேதரு பழவினை முழுவதுந் தொலைத்தான்"

என்பது யாது கற்பிக்கின்றது? மாகமாதத் திதியீறாய அமாவாசையின் முந்தின நிசியே (மாகபகுளசதுர்த்தசி) மஹாசிவராத்திரிக்குரித்தாயது. அதில் மஹாசிவராத்திரியை நோற்றுப் பின்வரும் அமாவாசையை அனுஷ்டித்து முடிப்பதே நான்முடிபு. ஆன்றோர் துணிபுமஃதே. இது நிற்க:

மாசியில் மஹாசிவராத்திரியை நோற்று, அமாவாசை அனுஷ்டானத்திற்குப் பங்குனி புகுதல் பழமையைப் பழித்தலே யாகும். இஃதுடன், எத்திதியேயாயினும் அத்திதி அபரான்ன வியாபகம் என்று ஏற்படுகிறதோ அன்றையநாளிலே யதைக் கொண்டாட வேண்டும். சிவராத்திரிக்கும் அப்படியே. ஆயினும், சிலசமயங்களில் அமாவாசையின் சம்பந்தத்தால் சதுர்த்தசியை விட்டு திரயோதசி அபரான்ன வியாபக தினத்தன்று நிசியில் மஹாசிவராத்திரி கொண்டாடுவதும் நூற்றுணிபேயாகும். மரபு மஃதே.

மேலும், இதுபற்றித் தாங்கள் கூறும் ஆகமங்களின் மூலவிவரமும், ஆனந்தவருடத்தில் மாசி மாதக் கடைசியில் எல்லா க்ஷேத்திரங்களிலும் மஹாசிவராத்திரி கொண்டாடியதற்குத் தாங்கள் கண்டுகொண்டுள்ள ஆதாரங்களும் இன்னின்னவென்பதைத் தெள்ளிதின் தெரிவிப்பீராயின் மிகவும் நலமாயிருக்கும்.

சிவசூரியநாராயண பிள்ளை,
பஞ்சாங்கக்கணிதர்,
இட்டமொழி.



# முதற்கடவுள் முக்கண்ணனே.

(கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.)

இவ்வுலகத்தை உண்டாக்கியவர் யார்? காக்கின்றவர் யார்? அழிப்பவர் யார்? இம் முத்தொழில்களையுஞ் செய்கின்றவர் ஒருவரா? பலரா? என்பனவாதிய வினாக்களுக்கு ஏற்றவிடைகளை யுணர்ந்தால், முதற்கடவுள் யாரெனத் தெளியலாம்.

கடவுளென்றாலென்ன? அப்பெயர் யாருக்குரியது? என்பன ஆராய்வோம். 'கட' என்னும் பகுதியும், 'உள்' என்னும் விகுதியுஞ் சேர்ந்து, இடையே வகர உடம்படுமெய் பெற்றுக் 'கடவுள்' என்னும் பதமாக ஆயிற்று. இதன்பொருள் கடத்தல் என்பதாம். எதை யெனின், மாயா சம்பந்தப்பட்டனவாகிய சேதனாசேதனப் பொருள்களை என்க. எல்லாவற்றையும் கடந்தவனாக எவனிருக்கின்றானோ அவனே கடவுளாவன். அஃதன்றிச் சேதனப் பொருள்களுடனேயோ, அசேதனப் பொருள்களுடனேயோ சம்பந்தப்பட்டுக்கொண்டிருப்பவர் கடவுளென அழைக்கப்பெறுவாரானால், அது முகமனே. எதுபோலெனின்? சிறிதளவீந்த யொருவனைக்கர்ணனென்று கூறின், அவன் கர்ணனாய் விடுவானா? அல்லது கர்ணனது வரையாதீயும் வள்ளன்மை அவனைச் சாருமா? அஃதே போலாம்.

நம் சமய நூல்களெல்லாம், படைப்பவர் பிரமா, காப்பவர் திருமால், அழிப்பவர் சிவனென்று கூறுகின்றன. ஒருசிலர் பிரமாவே முதற்கடவுளென்றும், ஒரு சிலர் திருமாலே முதற்கடவுளென்றும், ஒருசிலர் சிவனே முதற்கடவுளென்றுங் கூறுகின்றனர். இம்மூவர் கூற்றினுள்ளும் யார்கூற்று உண்மையென நோக்குழி, சிவனை, 'தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது நின்ற சுடரே' என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். 'சிவன், எல்லாப்பொருள்களிலும் நிறைந்திருக்கின்றான். ஆனால், ஒன்றிலும் அவன் இல்லை' என்பது இதன்பொருளாகும். தோய்ந்த ஒன்றிலேயே தோயாது நிற்றலும் எவ்வாறோவெனின், அதுதான் இறைவனின் முழுமுதற்றன்மை. உலகத்திற் கட்புலனுக்குத் தோற்றுகின்ற எவ்வுருவங்களும் அழியுந்தன்மை யுடையன. ஆதலின், அழியுந்தன்மை யுடைய அப்பொருள்களில்இறைவன் சார்ந்திருப்பனேல், அவை அழிகின்றகாலத்து அவனும் அழிய நேரிடும். இதனால், இறைவனுக்கு அந்தம் ஏற்பட்டு, அவனது முழுமுதற்றன்மைக்குப் பங்கம் ஏற்படும். பொருள்களொன்றிலும் தோயாதிருப்பானாயின், அவனுக்கும் பொருள்களுக்கும் சம்பந்தமற்று, அவனது வியாபகத் தன்மைக்குப் பங்கம் ஏற்படும். இறைவனது எண்குணங்கள், தன்வயத்த

னாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை முடிவி லாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை என்பனவாம். இவற்றில் ஒன்றிருக்க, மற்ற எழுகுணங்களை ஒருவருடையரா யிருப்பினும், அவர் கடவுளாக எண்ணப்படார். இவ் வெட்டுக் குணங்களில் தன் வயத்தனாதல் என்ற குணம் மற்ற இருவருக்கும் இல்லையென்பதைக் காட்டி, சிவனே முழுமுதற்கடவு ளென்பதைப் புலப்படுத்தி இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

பிரமனும், திருமாலும் சிவனுக்கு அடங்கி அவனது ஆணைப்படியே படைத்தல், காத்தல் என்ற தொழில்களைச் செய்கின்றார்கள். இதனை,

"பூவண்ணம் பூவின் மணம்போலமெய்ப் போத வின்ப
மாவண்ண மெய்கொண்ட வன்றன்வலி யாணை தாங்கி
மூவண்ண றன்சந்நிதி முத்தொழில் செய்ய வாளா
மேவண்ண லன்னான் விளையாட்டின் வினையை வெல்வாம்."

என்ற திருவிளையாடல் புராணச் செய்யுளாலறியலாம். மாட்சிமிக்க அரசராக ஒருவரிருக்க அவரது கட்டளைக் குட்பட்டு பல்திறப்பட்ட உத்தியோகஸ்தர்கள் அமர்ந்து அரசாங்கத்தை நடத்திக் கொண்டு வருகிறதினால், உத்தியோகம் பார்க்கின்றவரை அரசரெனக் கூறுதல் ஒவ்வுமா? அதுபோல எல்லாருக்கும் அரசராகச் சிவபெருமான் அரியணையமர்ந்து படைத்தல்தொழில் தலைவராகப் பிரமனையும், காத்தல்தொழில் தலைவராகத் திருமாலையும் ஏற்படுத்தி இராஜ்யபரிபாலனம் செய்கிறார். இதனால் அரசர் ஆணைமேற்கொண்ட அதிகாரிகளை அரசரெனக் கூறுவது போன்று, இறைவன் ஆணைமேற்கொண்ட பிரம விஷ்ணு வாதியரை இறைவனெனல் சாலுமா? இனி அது சரியன்று, 'பிரமா படைத்தல் தொழிலையும், திருமால் காத்தல் தொழியும் தமக்கே உரிமையாகக் கொண்டவர்கள். ஒருவர் தம அடைந்தவர்களல்லர். ஆதலின் அவரிருவரும் தம்வயத்தரே எனின், அற்றன்று.

மேருமலையின் சிகரங்களில் ஒன்றான முஞ்சாமனென்னுமிடத்தில் இருடிகள் பலர் பெருந்தவம் புரிந்துகொண் டிருந்தனர். அதுகாலை ஐந்துமுகங்களை யுடையவனா யிருந்த பிரமன் அன்னவாகனமேறி அங்குவந்தான். அவனைக்கண்ட இருடிகள் எதிர்சென்று வணங்கித்துதித்து, அன்னவாகனரே! நாங்கள் ஒரு பெரிய ஐயப்பாடுடையவர்களா யிருக்கின்றோம். அதனை யாரிடத்து நீக்கிக் கொள்வதென எண்ணி இருந்தகாலத்துத் தேவரீர் எழுந்தருளினீர். 'இவ்வுலகத்துக்குக் கருத்தா யாவன்? யாரிடமிருந்து தோன்றிவளர்ந்து ஒடுங்குகின்றது இவ்வுலகம்'? என வினவினர். பிரமன், மாமுனிகளே! நீவிர்கேட்ட இவ்விடயங்களெல்லாம் வேதசாரமானது; அறிய உரைக்கின்றேன். கேண்மின்கள்; உலகத்துக்குக் கருத்தா யானே.



இக் காணப்படும் உலகம் என்னிடமிருந்தே தோன்றியது. என்னாலேயே காக்கப்படுகின்றது. என்னுள்ளேதான் ஒடுங்கும் எனக் கூறினன். உடனே வேதங்களெல்லாம் பிரமனை நோக்கி சிவனேபரம்பொருளெனப் பலகாரணங்காட்டி விளக்கின. அவற்றைப் பிரமனிகழ்ந்து வேதத்தின் முதல் இடைகடைஎன்னும் மூன்றுஇடங்களிலு முள்ள பிரணவம் தன்னையே குறிப்பதென்று அகந்தையோடு சாற்றினன். அப்போதுஇறைவன் பைரவராகி பிரமனுக்குஎதிரேதோன்றி, அவனது ஐந்து சிரங்களில் ஒன்றைப் பூக்கொய்வதுபோலக் கிள்ளி எடுத்தார். அதனால் பிரமன் கீழேவிழுந்து இறந்தனன். பின்பு கருணைக்கடலான கடவுள் அவன்பால் இரக்கங்கொண்டு அவனை உயிர்ப்பித்து கர்வம் நீங்கச் செய்தனர் என்னும் சரித்திரத்தை,

"வருபடை வேகக் காற்றினின் முறிய
விரைந்துசெல் வயிரவப் புத்தேள்
திருமலர்க் குரிசில் பழித்திடு மஞ்சாஞ்
சிரசினை யுகிரினாற் கொய்தான்
பெருவிற லுயிர்போய் விழுந்தபின் மீளப்
பிஞ்ஞக னருளினா லுய்ந்து
மருள்வலி நீங்கி யெழுந்தனன் மறையோன்
வள்ளலை வணங்கிநின் றேத்தும்."

என்னும் காஞ்சிப்புராண வயிரவீசப்படலச் செய்யுளால் சிவஞானயோகிகள் கூறியிருக்கின்றார். பிரமனது தலையை இறைவன் கிள்ளியகாலத்தே பிரமன் தானாகவே சிருஷ்டித்தொழிலுடையவனாயிருக்கும் பக்ஷத்தில் உடனே மற்றொரு சிரசை சிருஷ்டித்துக் கொண்டு விடலாம். இறைவன் கட்டளையால் சிருஷ்டித்தொழிலைக்கொண்டோனாதலா லன்றோ இறைவன் தலை கிள்ளிய காலத்திறக்கநேரிட்டது. எனினும், பரங்கருணைத் தடங் கடலாகிய சிவபெருமான் தனது அருட்டன்மையை உலகத்தா ரறியும்படிக்கும் கர்வமுற்றோன் மறுமுறையும் அதுவுறா திருக்கவும் அவனைக் காப்பாற்றினார். இனி, திருமால்தான் காத்தற்றொழிலைத் தானே உரிமையாகக் கொண்டவரென்றாலோ அதுவுமில்லை. ஏனெனில்:

சிவபெருமான் 'கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி, வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய், எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடியிருந்து காட்டிச், சொல்லாமற் சொல்லிய' காலத்து மன்மதன் அவருக்குக் காமவிச்சையை உண்டாக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டவனாய்ப் புட்பபாணங்களை எறிய அதுகண்டு கோபங்கொண்ட இறைவன் மன்மதனைத் தன்னெற்றிக்கண் அக்கினியால் நீறாக்கினான். அப்போது காத்தல் தொழிலைக்கொண்ட திருமாலால் தன்

மகனைச் சாவாமலிருக்கச் செய்ய முடியவில்லை. பின் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாகிய முக்கண்ணனே அவனது கற்பின் மேம்பட்ட காதலியாகிய இரதிதேவியின் வேண்டுகோளுக்கிரங்கி உயிர்ப்பித்தது; தன்னால் அவன் செருக்கடங்கியமையை உலகத்தாரறியும்பொருட்டு மனைவியாகிய இரதிதேவிக்கன்றி மற்றையவர்களுக்குப் புலப்படாத உடலை அளித்தனன்.

இதனையே பரஞ்சோதி முனிவர், மூன்றாமாண்டிலேயே அம்மையப்பரைக் கண்டு ஞானமுண்ட செல்வருக்கும், அவரது தந்தையாராகிய சிவபெருமானுக்கும் சிலேடையாக,

"கடியவிழ் கடுக்கை வேணித் தாதைபோற் கனற்கண் மீனக்
கொடியனை வேவ நோக்கிக் குறையிரந் தனையான் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப் பின்னுயி ரளித்துக் காத்த
முடியணி மாடக் காழி முனிவனை வணக்கம் செய்வாம்."

எனத் துதிக்கலாயினர்.

இவ்விரு வரலாறுகளாலும் இறைவனொருவனே தன்வயமுடையனென்பதை அறியலாம். இவ்வாறே எண்குணங்களும் சிவனொருவனுக்கே உரியன என்பதைப் பல சான்றுகள் கொண்டு விளக்கலாம். இதனால் தன் வயத்தனாதலென்ற குணம் பிரம விட்டுணுக்களுக்கு இல்லையென்பதை யறிந்தோமாதலின், அவர்கள் பரமாகக் கருதுவதற்குத் தகுதியுடையவர்களல்லர்.

பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுளே உம்பர்களெவரினுமுயர்ந்தோனென்பதை, அரதத்தாசாரிய சுவாமிகளின் சுலோகபஞ்சகம் பலகாரண காரியங்களுடன் பசுமரத்தாணி பதித்தாற்போன்று அசைவற நிலைநாட்டுவதால், அதனை யுள்ளவாறே மொழிபெயர்த்தருளிய சிவஞான சுவாமிகளின் திருவாக்கை இஃதுடன் இணைத்து முடிக்கின்றேன். அதன் கருத்துக்களை ஆழ்ந்து சிந்தித்து முழுமுதற் கடவுள் முக்கண்ணனே என்பது தெளிதற்பாலதாம்.

"உயர்கா யத்திரிக் குரிப்பொரு ளாகலிற்
றசரதன் மதலை தாபித் தேத்தலிற்
கண்ணன் கயிலையி னண்ணிநின் றிரப்பப்
புகழ்ச்சிபி னமைந்த மகப்பே றுதவலிற்
றனது விழியுட னோராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலி
னுங்கவற் கிரங்கி யாழியீந் தருடலி
னங்கனைக் கிழவனை யழல்விருந் தாக்கலி
னமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடுதலிற்
றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலி
னவுணர் முப்புர மழிபவில் வாங்கலிற்



றக்கன வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மாறுட மடங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மகடூஉ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலி
னாழ்கடல் வரைப்பி னன்றோ ரநேக
ரன்புமீ தூர வருச்சனை யாற்றலி
னன்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலி
னையிரு பிறப்பினு மரியருச் சித்தலி
னிருவரு மன்னமு மேனமு மாகி
யடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறுப்புழி முகுந்தப் புத்தேள்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலி
னயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவு
ளும்பர்க ளெவர்க்கு முயர்ந்தோ
னென்பது தெளிக வியல்புணர்ந் தோரே.

---

சிவநேசனுக்கு மூலதனம் உதவிய திருவாளர்கள்:--

162. ப. ராம. சுப. சுப்பிரமணியன் செட்டியார்,
தேன்னூர்.

---

## சிவநேசனுக்கு வாழ்த்து.

(தேன்னூரிலிருந்து திருவாளர் ப. ராம. சுப. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள்.)

சிவதருமம் ஆதிய பரவி மக்கள் சிவபுண்ணிய சீலர்களாக வேண்டுமென்னும் ஒரே எண்ணத்துடன் பொருட் செலவையும் தேகசிரமத்தையும் பொருட்படுத்தாது ஊக்கமாகஉழைத்து உயரிய 'சிவநேசன்' பத்திரிகையை நடத்திவருவது பற்றி மிக மகிழ்ச்சியுறுவதுடன், மேலும் நீங்கள் தளராது சிவநேசனைச் செவ்வே வளர்க்கவும் உங்கட்கு ஈசுவரன் இகத்திலும் பரத்திலும் இன்பமளிக்கவும் வேண்டுகிறேன்.

186938

(பொன்னேரி பிரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாசஐயங்காரவர்கள்.)

"நல்லார் வாழ்ந்த நந்தமிழ் நாட்டில்
பொல்லாக் கலியன் புகுந்திடு காலை
ஆத்திகந் தவிர்க; நாத்திகம் பற்றுக;
பெண்டைச் சுமக்க; முண்டையை மணக்க;
தங்கையைக் கூடுக; தாயினைச் சேர்க;
சண்டாள ரிகளொடு கைகுலுக் கிடுக;
வடசொலை வைக; தென்சொலைக் கொல்க;
தம்மவர் சொல்லெலாம் பொய்யெனத் தள்ளுக;
வேற்றவர் சொல்லெலாம் மெய்யெனக் கொள்ளுக;
கண்டதே காட்சி கொண்டதே கோலமாய்
மாடுபோ லலைவதே சுயமரி யாதை
யாகவின் கட்டறுத் திடுக தமிழர்காள்!
எனப்பிர சங்கித் தலைகுல வெங்கும்
அவனிடுப் பொடித்துத் தமிழர்க் குதவ
வந்தனன் பலவான் குடியொரு பலவான்
அஞ்சாச் சிங்கம் நெஞ்சிற் காவிலன்
மாசறு தமிழன் தேசுறு சைவன்
ராம சாமி யெனுநற் பெயரோன்
சிவநே சன்னென் னுஞ்சீரிய சஞ்சிகை
அவன்கைக் கொண்ட அஸ்திர மாகும்
மற்றது காணும் மாற்றுயர் கதிர்கள்
காமனைக் காய்ந்தங் காலனை யுதைத்துஞ்
சோமனைச் சூடிய சோமாஸ் கந்தனே
தேவரெல் லாரினும் முழுமுதற் றேவன்;
சுந்தர நீறுந் துலங்குகண் மணியுமே
மக்க ளணியத் தக்க சின்னம்;
பஞ்சாக் கரமே மந்திர ராஜம்;
வேதா கமங்களே மெய்ந்நெறி நூல்கள்
என்பன வாதிய தொல்லற மனைத்துமே;
அந்தப் படையு மப்படைத் தலைவனும்
வாழ்க! வாழ்க! வாழ்க! நெடுநாள்
ஏழ்தலம் புகழ இறையருள் பெற்றே.

(பரிமணங்குடி வித்துவான் திரு. மு. முத்துப்பிள்ளை யவர்கள்.)

மதிச்சிவ நேசன்மிக வையமிசை யச்சிற்
பதிச்சிலக வெங்கும் பரப்பும்— நிதிச்சுகுணன்
மன்னுபல வான்குடியூர் வாழ்ராம சாமிதகன்
றன்னருளால் வாழ்கவென் றுந்தான்.

---



## கச. இரவுக்குறி யிடையீடு.

### இறைவிக்கு இகுளை இறைவரவுணர்த்தல்.

189. கருகுங் களத்தர் திருமுது குன்றர் கவின்சிலம்பில்
முருகுங் கடியும் விரிமலர்ச் சோலையின் மொய்யிருள்வாய்
உருகு மனத்தி னிரண்டுமொன் றாக வுடனெருங்கிக்
குருகும் பெடையு முறங்காத் துழனியென் கொம்பனையே. (க)

### தான் குறிமருண்டமை தலைவி பாங்கிக்குணர்த்தல்.

190. அன்பர் தமக்குத் துணையென நின்றவர் சொன்மனத்தில்
அன்பர் தமக்கங் கருண்முது குன்ற ரணிவரைமேல்
அன்பர் குறியென வேறோர் குறியி னடைந்துநெஞ்சம்
முன்பறி யாத துயர்கொண்டு மீண்டனன் மொய்குழலே. (உ)

### பாங்கி தலைமகன் தீங்கெடுத் தியம்பல்.

191. விந்த மடக்கு முனிதாழ் முதுகுன்றர் வெற்பிடத்திற்
குந்தங் கடக்குங் கொடுங்கூர் விழியுடைக் கொம்பனையாய்
சந்தங் கிடக்குந் தொடைத்தோளர் செய்குறி தாம்பிழைத்தார்
பந்தங் கடக்கு முலைப்பசப் போநம் பகையென்பதே. (௩)

### தலைவன் புலந்து போதல்.

192. அனமே செறியுந் தடமுது குன்ற ரணிவரைமேற்
சினமே செறியு மரியு முழுவையுஞ் சேர்வனத்திற்
கனமே புறழுங் குழற்கா விருள்வரக் கற்பனைசெய்
மனமே யெனது துயர்தீயு மேவி வருந்துவையே. (௪)

---

189. முருகு - தேன். கடி - வாசனை. இரண்டுடனும் ஒன்றாக நெருங்கி: "ஒருருவை யீருருவா யுடைக்கின்ற துலகம்பே, ஈருருவை யோருருவா யிசைக்கின்ற தெனதம்பே" பாசவதைப் பரணி, காமன் கூற்று, ககரு.

190. அன்பர் தமக்குத் துணையென நின்றவர்: "அடுபழி யஞ்சா நீச ராயினு நினைந்தி னச்சம், படுபழி யஞ்சான் செய்த பாதகத் தொடக்குண் டெங்கும், விடுவகை யின்றி வேறு களைகணு மின்றி வீயக், கடவனைக் காய்ப துன்றே காப்பென்றான் கருணை மூர்த்தி" (திருவிளை. மாபாதகந். கூ) என்னும் அருமைச் செய்யுள் இங்கே நினைவுக்கு வருகின்றது.

191. சந்தம் - அழகு, சந்தனம். பசப்போ: ஓகாரம் எதிர்மறை.

192. கற்பனைசெய் - கற்பித்த.

புலர்ந்தபின் வறுங்களம் தலைவிகண்டிரங்கல்.

193. கலர்கண்டு முத்தி பெறுமுது குன்றர் கவின்சிலம்பில்
மலர்கொண்டு தாதி னரிசனம் பூசிமெய் வண்டினங்கள்
பலகொண்டு நின்றிடு பாடல மாதே பதியிருளொன்
நலமுண்ட வன்பர்வந் தாரோவிக் காவி னவிலுவையே. (௫)

தலைமகள் பாங்கியோடு உரைத்தல்.

194. வாவித் தடமலர் சேர்முது குன்றர் மணிவரைமேற்
காவித் தடமல ரொவ்வாக் கருங்கட் கவினுடையாய்
தாவிற் செறிவினிச் சோலையிற் செய்குறி தப்பினர்நம்
ஆவிக் குரிய தடந்தோளின் மன்ன ரரையிருளே. (௬)

தலைமகள் அவலம் பாங்கி தணித்தல்.

195. வானலங் கொண்ட திருமுது குன்றர் மணிவரையார்
தானலங் கொண்ட மொழிதவ றாது தண்ணளியால்
தேனலங் கொண்ட வரிதான் கணியினைச் சேர்ந்ததுண்டே
பானலங் கண்ட சருக்கரை மென்மொழிப் பைந்தொடியே. (௭)

இறைவன்மேற் பாங்கி குறிபிழைப்பேற்றல்.

196. மாகத் தவர்கள் பணிமுது குன்றர் மணிவரைமேற்
சோகக் கடலு ளமைவீழ்த்தி நீர்முன் சொலும்வகைகள்
போகத் துறந்து வரவொழித் தீரும் புரிப்புதுமை
தாகத் துடன்கண்டு சார்ந்திருப் போமெனத் தங்கினமே. (அ)

---

193. தாதாகிய அரிசனத்தைப் பூசி; தாது - மகரந்தம்; அரிசனம் - மஞ்சள். வண்டினங்கள் - வண்டுகள், வளையல்கள். பாடல மாதே - பாதிரிமரமாகிய பெண்ணே!

194. தாவு - இடம்; திசைச்சொல்; "ஆயமின்னோர், தம்பால் விரைந்து செல் வாமினி நாமிந்தத் தாவகன்றே"(திருவாவடுதுறைக் கோவை, ௪௫௬.) இருளில் மன்னர் செய்குறி தப்பினரென இயைக்க.

195. அது தண்ணளியாகும்; ஆல்: அசை. அரி - மாலை; வண்டெனலுமாம். கணி - வேங்கைமரம். கண்டசருக்கரை - கற்கண்டு; இப்பெயர் கண்டு சருக்கரை யென்று பழைய உரைகளிற் காணப்படும்.

பி-ம். 'தவறாது தண்மையினால்,' 'கணியினைச் சேர்ந்ததுண்டோ'

196. புரி - ஊரினுடைய. உம்முடைய ஊருக்கு வர எண்ணியிருந்தேமென்பது கருத்து.



இறைவிமேல் இறைவன் குறிபிழைப்பேற்றல்.

197. அலையி லிருந்தவன் றாழ்முது குன்ற ரணிவரைமேல்
மலையி லிருந்த வமுதனை யீருமை மன்னுறவெல்
நிலையி லிருந்த பொழிலெங்குந் தேடி நெடிதுநின்றேன்
இலையின் மறைந்த கனிபோன் றிருப்பி னிருப்பிரென்றே. (௯)

தலைமகள் குறிமருண்டமை தோழி தலைமகற்கு உரைத்தல்.

198. வான்செய்த பூசை கொளுமுது குன்றர் மணிவரைமேல்
தேன்செய்தபூம்பொழிற்கண்ணின்குறியெனச்சிந்தையினாற்
கான்செய்த வார்குழ லல்ல குறிக்குக் கலங்கிநின்றே
நான்செய்த தீவினை யென்றுவந் தாளரு ளையகனே. (௧௦)

தோழி தலைமகன் சொல்லிய கொடுமையைத்
தலைமகட்குச் சொல்லியது.

199. செல்லார் மலர்ப்பொழில் சூழ்முது குன்றர் செழுஞ்சிலம்பர்
கல்லா ரரியுடன் வேங்கையு மேவிய காரிருளின்
வல்லார் தனம்புணர் வேட்கையி னெஞ்ச மயங்கிநின்றே
அல்லார் குழலாய் வருந்திவந் தேனென் றறைந்தனரே. (௧௧)

என்பிழைப்பன்றென்று இறைவி நோதல்.

200. நச்சிப் பணியும் விதிமுது குன்றர் நவில்சிலம்பில்
மெச்சிப் பணியும் விறற்கா வலரை விரும்பியின்று
நொச்சிக் கருமல ரூழ்நள் ளிருளினை நோக்கியுற்றும்
இச்சிப் பறமறந் தாளென் றலர்மொழி யெய்தினனே. (௧௨)

தாய் துஞ்சாமை.

201. பாயு முழைகொள் கரமுது குன்றர் பனிவரைமேற்
காயும் வடியுடை வேலினர் செய்குறி காண்பதற்கிங்
கேயு முயிர்க ளிணைவிழி மூடினு மீன்றிடுநம்
தாயின் றுணைவிழி மூடா திருந்ததென் றன்வினையே. (௧௩)

---

197. எல் - இரவில்.

199. செல் - மேகம். கல் - மலை. அரியுடன் - சிங்கத்துடன்.

200. விதி நச்சிப் பணியும்; விதி - பிரமதேவர். பகைவர்கள் மெச்சிப் பணியும் விறல். ஊழ்த்தல் - பதனழிந்து வீழ்தல். நொச்சிக் கருமலர் ஊழ் நள்ளிருள்: "நொச்சிப் பூவுதிர் நள்ளிரு ளடுநாள்" கல்லாடம், ௨.

201. வடி - கூர்மை; வடித்தலுமாம்.

பி-ம். 'என் றாழ்குழலே'

நாய் துஞ்சாமை.

202. கருவிற் புகுதா தருண்முது குன்றர் கவின்சிலம்பிற்
செருவிற் கொருவ ரெனும்விறன் மன்னவர் சேர்பொழுதிற்
பொருவிற் கொருவ ரிலாவனை துஞ்சினும் பொங்கிருளில்
தெருவிற் சுணங்கன் றுயிலா திருந்ததென் சேயிழையே.(கச)

ஊர் துஞ்சாமை.

203. துதியைப் பொருந்துந் திருமுது குன்றர் சுடர்க்கிரிமேற்
பதியைப் பிரிந்த வெனது விழிதுயில் பற்றிலபோல்
நுதியைப் பொருந்து நெடுவேற் குறவர் நுவன்றிடுமூர்
மதியைப் பொருந்து முகத்தா யுறங்கா வழிபுகலே. (கரு)

காவலர் கடுகுதல்.

204. கார்காவல் கொள்பொழில் சூழ்முது குன்றர் கவின்சிலம்பில்
வார்காவல் கொண்முலைக் குன்றா ரருவியின் வார்விழிநீர்
ஏர்காவ னீக்கித் துயர்செ யிரவி னிடையடங்கா
ஊர்கா வலர்பறை யோயா திருந்ததென் னொள்ளிழையே.(கசு)

நிலவு வெளிப்படுதல்.

205. துங்கம் பொருந்தும் பெருந்தோன் மகிணர் துயரகலச்
சங்கம் பொருவுங் களத்தாய் முதுகுன்றர் தண்சிலம்பிற்
பொங்குங் கடலிற் பிறந்தேழ் புவியும் புணர்நிலவின்
அங்க முழுது மறுவா யிருக்கி னழகியதே. (கஎ)

கூகை குழறுதல்.

206. தோகைக் கொருபுற மீந்தோர் முதுகுன்றர் தொல்வரைமேல்
வாகைக் கொருவ ரெனுநம் மகிணர் வரவெதிரப்
போகைக் கிடையஞ்ச வாய்குழ றாநின்ற புல்லறிவின்
கூகைக் கெதுபயன் கூடிடு மோமலர்க் கொம்பனையே. (கஅ)

---

202. செருவிற் கொருவ ரெனும்விறன் மன்னவர்: "வாகைக் கொருவ ரெனுநம் மகிணர்" (உ௦சு) என்பர் பின். பொருவிற்கு - ஒப்பினுக்கு.

203. உறங்கா வழி - உறங்காதிருத்தற்குக் காரணத்தை.

204. கண்ணீர்க்கு அருவி உவமை.

205. நிலவின் - நிலவையுடைய சந்திரனது; நிலவு: சினையாகுபெயர்.

206. நாம் போகைக்கு என ஒருசொல் வருவிக்க. கூகை - கோட்டான்.



கோழி குரற் காட்டல்.

207. மைக்கொண்டல் சூழும் பொழின்முது குன்றர் மணிவரைமேல்
வைக்கொண்ட வார்கணை நம்விழிக் கேற்ற மகிணனைக்கண்
டிக்கொண்டை வாரணந் தன்னையெப் போது மெழின்மலரார்
கைக்கொண்ட வேலவர் வந்தா ரெனக்குரல் காட்டியதே.(ககூ)

---

## கரு. வரைதல் வேட்கை.

தலைமகளைப் பாங்கி பருவரல் வினாதல்.

208. ஆரணம் போற்றுந் திருமுது குன்ற ரணிவரைமேற்
பாரணங் கோவெனும் பைந்தொடி யாய்நின் பருவரற்குச்
சீரணங் காகு மனைகுறை யோபண்ணை செய்குறையோ
காரண மேது மனத்துள் ளதனைக் கழறுவையே. (க)

தலைமகள் அருமறை செவிலி அறிந்தமை கூறல்.

209. நிலந்துன் பகலத் திகழ்முது குன்றர் நெடுவரைமேல்
வலந்தன் புடைகொளும் வேல்விழி யாயென் வகுத்திடுவேன்
நலந்தன் புடைகொளும் பொன்னே ரனையின் னடுவிருளிற்
கலந்தன்பர் போகு மிடத்திற்கண் டாணங் களவினையே. (உ)

தலைமகள் தலைமகன் வருந்தொழிற்கு அருமை சாற்றல்.

210. பற்றார் புரமெரி செய்முது குன்றர் பனிவரைமேல்
நற்றாய் முடுவல் குறிச்சி துயின்றில நண்ணுறுங்காப்
புற்றார் வருத்துவர் திங்க ணிலவுறு மோங்கிசைகள்
வற்றாக் குடிஞையுஞ் சேவலு மென்றுயர் மாற்றிலவே. (ங)

---

207. வை - கூர்மை. கொண்டை - தலையிலுள்ளசூட்டு; "பூத்தலை வாரணப்போர்" (சீவக. 120.) வாரணம் - கோழி. மலரார் கை - மலர்போன்றகை; ஆர்: உவமவுருபு. வேலவர் - வேலையுடைய முருகக்கடவுள். வாரணம் காட்டியது.

பி-ம். 'தம்மையெப் போதும்'

208. பார் அணங்கோ - பூமியிலுள்ள தெய்வமகளோ. அணங்கு ஆகும் அனை குறையோ - துன்பஞ் செய்பவளாகிய தாயால் நேர்ந்த குறையோ. பண்ணை - மகளிர் கூட்டம்.

209. வலம் - வெற்றியை. பொன் நேர் அனை - திருமகளை ஒத்த தாய். இல் நடு இரவில் - வீட்டில் நள்ளிரவில்.

210. முடுவல் - நாய். குறிச்சி - குறிஞ்சிநிலத்தார். காப்புற்றார் - ஊர் காவலர். குடிஞை - கோட்டான். மாற்றில: அதிகப்படுத்தின என்பது கருத்து.

தலைமகள் தலைமகன் ஊர்க்குச் செல ஒருப்படுதல்.

211. மண்ணுக் கினிய திருமுது குன்றர் மணிவரைநம்
கண்ணுக் கினியர் நமைமறந் துற்ற கவின்பதிக்கு
நண்ணித் துயரினைக் கூறுது மோவின் னகைமதிபோற்
பெண்ணுக் குயரெழில் பெற்றிடு வாண்முகப் பெய்வளையே. (௪)

பாங்கி இறைவனைப் பழித்தல்.

212. துன்பிற் படுமெனை யாண்முது குன்றர் சுடர்க்கிரிமேல்
முன்கற் புனத்திடை நம்மைத் தொடர்ந்து மொழியிதந்தால்
வன்பிற் புணர்ந்து மறந்தார் பதியிடை வல்லிருளின்
அன்பிற் றொடரிற் றகுமோ நமக்கிங் கவிரிழையே. (௫)

தலைமகள் இயற்பட மொழிதல்.

213. செம்மைத் திருமுக மஞ்சுடை யார்முது சீர்மலையார்
நம்மைப் புரந்தவவ் வெற்பரை நோவது நன்றலமுன்
தம்மைத் தொடர்ந்த வினைப்பய னென்பதைச் சார்குநர்க்குக்
கொம்மைத் தடமுலை வார்குழற் கூர்ங்கட் கொடியிடையே. ()

தலைமகள் கனவு நலிவுரைத்தல்.

214. கற்பனை யொன்று மிலாமுது குன்றர் கவின்சிலம்பிற்
பொற்புறு தோள ருடல்வருந் தாதெனைப் பொங்கிருளிற்
சொற்பன மொன்று தினம்புணர்ந் தாரவர் சூழ்ச்சியைநீ
விற்பன மாக வறிந்திலை வார்குழன் மெல்லியலே. (௭)

தலைமகள் கவின் அழிவுரைத்தல்.

215. விண்டடுத் தோங்கு முதுகிரி வாணர் வியன்சிலம்பில்
வண்டடுத் தார்க்கும் வணர்வார் குழலுடை மானனையாய்
பண்டடுத் தார்புனம் வந்தவர்க் கன்றிப் பயனடையா
துண்டடுத் தீயார் பொருள்போன்ற தென்ற னுடலழகே. (௮)

211. பதிக்கு - பதியை; உருபுமயக்கம்.
213. முதுசீர்மலை - முதுகுன்றம். சார்குநர்க்கு நோவது நன்றல்லவென இயைக்க.

214. சொற்பனம் - கனவு; "சொற்பன மோவென்ன வற்புத மோவங்குத் தோன்றியதே" (திருவாவடுதுறைக் கோவை, 34.) ஒன்று தினம் - பொருந்திய தினத்தில். விற்பனம் - விந்தை.

215. விண்ணைத் தடுத்து. பயனடையா......அழகே: "ஈயார் பொருளு மிறையாக் கிணறுமென......நலமிழந்தேன்." திருவெங்கைக். 219.



தலைமகள் தன்துயர் தலைமகற்கு உணர்த்தல் வேண்டல்.

216. முன்னோர் சசிவன்னன் றொழ்முது குன்றர் மொழிவரைமேல்
என்னோர் குறையினைக் காவலர் பாற்போ யிசைப்பவர்தாம்
பின்னோர் குறையு மடையாம லென்றும் பெரும்புவியில்
மன்னோர் பணிய நெடுநா ளிருப்பர் வளமுறவே. (௯)

பாங்கி நின்குறை நீயே சொல்லெனச் சொல்லல்.

217. எட்டா ருருவர் திருமுது குன்ற ரெழில்வரைமேல்
மட்டார் மலர்செறி வார்குழ லாய்நின் வடிவிடைமால்
விட்டா ரலரெனின் வேறே யொருவர் விளம்புவதென்
ஒட்டார் பரவு நெடுவேற் கரங்கொ ளொருவருக்கே. (௧௦)

தலைமகள் அலர்பார்த்துற்ற அச்சக் கிளவி.

218. கனங்க டவழுந் திருமுது குன்றர் கவின்சிலம்பிற்
புனங்க டிரிந்து நமையவர் கண்ட பொழுதநங்கன்
சினங்கள் புரிந்தெய் மலர்க்கணை தம்மினுஞ் சேயிழைநஞ்
சனங்கள் புகலு மலர்மொழி நெஞ்சிற் றரிப்பரிதே. (௧௧)

ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவி.

219. விளைகொள் வயல்புடை சூழ்முது குன்றர் வியன்சிலம்பிற்
றளைகொள் கரமுடைத் தோலு முழுவையுஞ் சூழ்புனத்தில்
வளைகொள் கரமுடை மாதே யவர்வந்து போம்வழியிற்
களைகொள் ளெனது மனம்போய்த் தொடர்ந்து கலந்திடுமே. ()

216. சசிவன்னனென்பவன் வழிபட்டுப் பேறுபெற்றமை, இத்தல புராணத்திலுள்ள சசிவன்னச் சருக்கத்தால் விளங்கும். காவலர் - தலைவர்.

பி-ம். 'இசைத்தவர்க்குப்'

217. எட்டாருருவர் - பிருதிவி முதலிய எட்டாகிய திருவுருவத்தை யுடையவர்; "அட்டமூர்த்தி வெண்காடடை நெஞ்சே" (தே. திருநா); "அட்ட மூர்த்திதாள் பணியு மாற்றலான்" (கம்ப.) மட்டு - தேன், மணம். அலரெனின் - அல்லராயின். ஒட்டார் - பகைவர்.

பி-ம். 'விளம்புமதென்'

218. கனம் - மேகம். அநங்கன் - மன்மதன்.

பி-ம். 'புரிந்து மலர்க்கணை யெய்யினும்'

219. தோல் - யானை. களைகொள் - களைத்தலைக்கொண்ட. மனம் போய்த்தொடர்ந்து கலந்திடும்; "அடும்பின் மென்கொடி துமியக் கடும் பகற், கொடுங்கழி நீந்தின் வந்தருள், நெடுந்தோ ளண்ணல்பின் சென்ற தென் னெஞ்சே" பழம்பாட்டு.

### காமமிக்க கழிபடர் கிளவி.

220\. விதிசா ரதியாக் கொளுமுது குன்றர் வியன்சிலம்பிற்
பதிசார் விலாத வெனைப்போல் விழிதுயில் பற்றிலிர்நீர்
மதிசா ருயர்வு கொளும்பா டலத்தின் மருவளிகாள்
துதிசார் சுரும்பின நீங்கின வோவிங்ஙன் சொல்லுவிரே. (கங)

### இ து வு ம து.

221\. நம்பா லருளுடை நன்முது குன்றர் நவில்சிலம்பர்
தம்பான் மனம்வைத் தெனைப்போற் றணந்து தளர்ந்தனையோ
அம்பாற் குழைந்துதென் காலா லசைந்தே யளிவிழச்சேர்
வம்பா ரலருடன் பொன்பூத்த மேனி வழையணங்கே. (கச)

### தலைமகள் நெறி விலக்குவித்தல்.

222\. செற்றார் புரமெரி செய்முது குன்றர் செழுஞ்சிலம்பில்
நற்றா யினுமவர் நல்லவ ராகி நவிலவர்பால்
உற்றா ரெனின்வல் லரிநிரி கானி லுறுதொழியச்
சொற்றா ரெனின்முன் பறியாத செல்வமுந் தோய்குவரே.(கரு)

### தலைமகள் குறிவிலக்குவித்தல்.

223\. முறிச்சிக்கை நம்பிகட் செய்முது குன்றின் மொழிமனற்கு
மறிச்சுப் புனங்காப் பதற்கனை போக வகுத்தனணீர்
நெறிச்சிக் குடைய விலங்கினஞ் சாரு நெடுமலைச்சார்
குறிச்சிக் கிருளில் வாரதொழி வீரெனக் கூறுகவே. (கசு)

---

220\. விதி - பிரமதேவரை. பதி - தலைவர். அளிகளென்றது பெண் வண்டுகளை. சுரும்பென்றது ஆண்வண்டுகளை.

221\. அம்பால் - மன்மத பாணத்தால், நீரால். அளி விழ - அன்பு நீங்குதலால், வண்டுகள் வந்து விழுதலால். அலர் - பழிமொழி, பூ. பொன் - பசலை, பொன்னிறம். வழை - சுரபுன்னை.

222\. அரி - சிங்கம்.

223\. முறிச்சிக்கை - ஆவண ஓலையில் அகப்படுத்திக் கொள்ளுதலை. நம்பிகண் - சுந்தரமூர்த்தி நாயனாரிடத்தே. மன்னற்கு - அரசனுக்கு. மறிச்சு= மறித்து - மறுபடியும். நெறிச்சிக்கு - பல வழிகளும் கலந்திருத்தல். மன்னற்குக் கூறுகவென இயைக்க.

பி-ம். 'குன்றர் மொழிமனற்கு', 'கூறு

186938

உ

## பலவான்குடி குமாரவிநாயகர் துதி.

பலவான்குடிச் சிவர்கட்கும் பல்வளமு மோங்கச்
சிவகுமாரன் செய்வான் றினம்.

வானமர் யாவருஞ் சூழ்பல வான்குடி மன்னுகரி
யானன நாதன் குமார கணேச னடியிணையிற்
றேனவர் கொண்டருச் சித்தன்பு செய்செகச் சிவர்கள்மெய்ஞ்
ஞானமுங் கல்வியுஞ் செல்வமு நண்ணுவர் நாடொறுமே.

திரு. மு. முத்துப்பிள்ளை.

திருவானைக்கா:—பஞ்சபூத ஸ்தலங்களுள் அப்புக்ஷேத்திரமும் மூவர்தேவாரம் பெற்றதுமான இத்திருத்தலத்தில் பிரமோற்சவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ௸ சிவாலயத் திருப்பணிச்செல்வரின் திருக்குமாரர்களுள் ஒருவரும் தருமகருத்தருமாகிய திருவாளர் ஜம்புலிங்கம் செட்டியார் ௸ உற்சவத்தையும் உற்சவ பூர்த்தியாகிய பஞ்சப் பிரகார சேவையையும் சிறப்புறச் செய்ததுடன் பங்குனி ௴ ஆயிரக்கால் மண்டபத்தில் ஒரு மகாசபை கூட்டிச் சொற்பொழிவுகளும் நடத்தினார்கள். திருவாளர்களான:—[illegible] எஸ். சிதம்பரனையர், மதுரை மித்திரன் ஆசிரியர் என். சுப்பிரமணியம், தமிழ்ப்பண்டிதர் இ. எஸ். வரதராஜையர், 'சிவநேசன்' இராமசாமிச்செட்டியார், தமிழ்ப் பண்டிதர் அ. மு. சரவணமுதலியார், டி. என். சேஷாசலம் ஐயர், சுவாமி தயானந்த சரஸ்வதி ஆகியவர்கள் விரிவுரையாற்றினர். தேவாரமணி ஆ. க. அருணாசலதேசிகராகியோர் பண்ணமைவுடன் தமிழ்மறையோதினர். வந்தன வாழ்த்துகளுடன் இனிது நிறைவேறியது. அன்பர் பலர் கண்டு கேட்டு உண்டு மகிழ்ச்சியிற் றிளைத்தனர்.

தேவகோட்டை:—மகா-ா-ஸ்ரீ வக்கீல் சீனிவாசையங்கார் கிரகத்தில் நாகைய நல்லூர் பிரமஸ்ரீ இராமநாத சாஸ்திரியாரால் ஸ்ரீமத் வான்மீகி ராமாயணத்தை ஒன்பது பாகமாக மார்ச்சு 8௳ முதல் 16௳வரை 9 நாட்களில் பொருள்விரித்துப் பட்டாபிஷேகம் செய்யப்பெற்றது.

சண்முகநாதபுரம்:—இவ்வூரில் தனவணிக நகரத்தார்களால் ஒருவைத்திய சாலைகட்டி, இராமநாதபுரம் ஜில்லா ஸர்ஜன் மகா-ா-ா-ஸ்ரீ கே. நாராயணசாமி ஐயரைக்கொண்டு மார்ச்சு 27௳ திறப்புவிழா செய்யப்பெற்றது. விரிவுரைகளும் தேநீர்விருந்தும் நடைபெற்றன.

சைவசமய பக்தஜனசபை:—இச்சபையார் பங்குனி ௴ சென்னையிலிருந்து புறப்பட்டுத் திருவீழிமிழலை முதல் திருமீயச்சூர் வரை பலஸ்தலங்களை அடைந்து, மூர்த்திகளுக்குத் திருமஞ்சன திருவாராதனைகளுடன் திருக்கோயில் வழிபாடும், தமிழ்வேத பாராயணமும், மாகேசுவர பூசை முதலியனவும் செய்து, உ௰௳ திங்கட்கிழமை இரவு சென்னைக்குத் திரும்பினர்.

கண்டராச்சிபுரம்:—நடுவீதி பழநியாண்டவர் சந்நிதியில் பங்குனி ௴ உத்திரநாள் காவடிகள் அபிஷேகமும் மகாபிஷேகமும் அலங்கார ஆராதனைகளும் நடைபெற்றன. பல அன்பர்கள் அலகுபூண்டு பத்தடி உயரமுள்ள இரதங்களை யிழுத்து வீதிவலம் வந்ததைக் கண்ணுற்றோர் முருகவேளின் திருவருட்டிறத்தைப் போற்றினர்.

---

### "சிவநேசன்" ஆண்டுத்தொகை விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ | 2-4-0 | அதற்கு மூலதனம் | ரூ | 30-0-0 |
| அயல்நாட்டிற்கு | ரூ | 3-0-0 | அதற்கு மூலதனம் | ரூ | 40-0-0 |
| தனிப்பிரதி | அணா | 0-3-0 | | | |

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர்
ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.